# பூவரசு

இனிய தமிழ் ஏடு
இரு திங்கள் ஒன்று.

கார்த்திகை– மார்கழி '97

Poovarasu.



இந்துமகேஷ் எழுதும்
'இரட்டை வேடம்'
அடுத்த இதழில்....




தமிழர் புனர்வாழ்வுக்கழக போர்மனிக்கிளை நடாத்திய
விடுதலை கானம்பாடி 1997 போட்டியில் மேற்பிரிவு ஆண்களில்
சிறந்தபாடகராகத் தெரிவுசெய்யப்பட்ட திரு.நடராஜா அவர்கள்

தமிழர் புனர்வாழ்வுக் கழகப்பொறுப்பாளர் திரு.ஆனந்தராஜாவுடன்.

# நிழற்படங்கள்
# சொல்லும்
# நிகழ்வுகள்...




பிறேமன் தமிழர் விளையாட்டுக்கழகத்தின்
5வது ஆண்டு நிறைவு விழாவில் இடம்பெற்ற
கண்டியரசன் நாட்டுக் கூத்தில்
கண்டியரசனாக திரு.லோரன்ஸ் அவர்களுடன்
பிறேமன் கலைஞர்கள்.

ஆசிரியர்:
இந்துமகேஷ்.

வெளியீடு:
பூவரசு கலை இலக்கியப் பேரவை,
ஜெர்மனி.

இனிய தமிழ் ஏடு
இரு திங்கள் ஒன்று

# பூவரசு

இதழ்:-48
கார்த்திகை-மார்கழி 1998.
Nov-Dec.98

உள்ளே....

□ அருணாசலய்
□ புஷ்பராணி ஜோர்ஜ். □ கொற்றையூர் வாசன்
□ இ.சம்பந்தன் □ கஜன் □ இராஜன் முருகவேல்
□ இந்துமகேஷ் □ இராஜகாந்தன் □ எழிலன்
□ எம்மெஸ்ஸார் □ ஞானக்குமாரன்
□ வீஜயா அமலேந்திரன் □ வீ.ஆர்.வரதராஜா
□ பிரசாந்தன் □ சஞ்சயன்

முகவரி:
Poovarasu.
Sinniah Maheswaran.
Otto Brenner Allee 56.
28325 Bremen.
Germany.

Poovarasu
Tamilische Kultur Magazin

உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம்சொந்தம்.

அன்பு வாசகநெஞ்சங்களுக்கு!

வணக்கம்!

இந்த இதழ் பூவரசு-
அதன் இலக்கியப்பயணத்தில் 7வது ஆண்டின் இறுதி இதழ்.
1991 தைத்திங்களில் பொங்கல்தினத்தன்று முதல் இதழ் வெளியிட்டு வைக்கப்பட்டபோது என்னுள்ளிருந்த அதே உற்சாகத்துடனேயே இன்னும் இந்த இலக்கியப் பணியைத் தொடர்கிறேன்.
இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் நமது தாயகத்தில் "இதயம்" மாத இதழை நான் வெளியிட்டபோது ஏற்பட்ட அதே அனுபவங்களே இந்தப் புலம்பெயர்மண்ணிலும் "பூவரசு"மூலம் என்னைத் தொடர்கின்றன என்பது எனக்கு ஆச்சரியமளிக்கும் உண்மை.
ஆனாலும் இந்த வேதனைகளையும் சோதனைகளையும் கடந்து நின்று பூவரசு தன்பணியில் சளைக்காது முன்னேற என்னாலான சகல பிரயத்தனங்களையும் செய்துவருகிறேன்.
இழப்புக்களைப்பற்றி அடிக்கடி சொல்லி அங்கலாய்ப்பதில் அர்த்தமில்லை என்று தோன்றுகிறது.
பூவரசு தளிர்விட்டநேரம் கூடவே புறப்பட்ட பல சஞ்சிகைகளை இப்போது காணோம்! "பூவரசுக்கும் அதுதானே நேரும்?"என்று எதிர்பார்த்த ஒருசிலரையும் மீறி பூவரசு வளர்கிறது. என்னிலும் அவர்கள் தங்கள் எண்ணத்தை வளர விட்டார்கள்.
"இன்னும் எத்தனை காலத்துக்கு?"
ஆனாலும்-
எதைநினைத்து நான் பூவரசைப் பதியமிட்டேனோ அதில் எனக்கு ஒரு ஆத்ம திருப்தியுண்டு.
புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தில் பூவரசும் தனக்கென்று ஒரு இடத்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறதாய் கலை இலக்கிய நண்பர்கள் சொல்லும்போது மனதுக்கு ஆறுதலாய் இருக்கிறது.
"அறிமுகப் படைப்பாளர்கள்முதல் வளர்ந்த கலைஞர்கள்வரை தங்கள் திறமைகளை வெளிக்கொணர்வதற்காகவே பூவரசு" என்ற இதன் அடிப்படைக் கொள்கையில் மாற்றமில்லை.
நிழல்கொடுத்தே பழக்கப்பட்டது பூவரசு.
வளர்ந்தாலும் விழுந்தாலும் ஏதாவது ஒரு பயன்பாட்டுக்கு உதவுவதே அதன் தனித்தன்மை.
வளர்ந்தால் அதன்பலன் அதிகம். விழுந்தால் விறகாகவேனும் பயன்படாதா?
எது எப்படியிருப்பினும் புலம்பெயர்மண்ணில் தமிழ்ப்படைப்பாளர்கள் பெருகவேண்டும் என்பதிலும் தமிழ்க்கலை இலக்கியங்கள் பெருக வேண்டும் என்பதிலும் பூவரசு என்றும்போல் அக்கறையோடு உழைக்கும்.
அன்றுமுதல் இன்றுவரை அதன் வளர்ச்சியில் அக்கறைகாட்டிவரும் உங்களோடும்-புதிய தளிர்களின் உறுதுணையோடும் தன் பணியை அது சளைக்காது தொடரும்!
தொடர்வோம்!

அன்புடன்
இந்துமகேஷ்
(ஆசிரியர், பூவரசு)

# அமைதிக்காய் கண்மலர்வாய்!

பாரினை மீட்கவே பாலனாய் வந்தவா
பாவினால் உன் புகழ் பாடுகின்றேன்.
செல்வப் பிறப்பாக நீ இங்கு வரவில்லை
ஏழையாய் எம் மண்ணில் வந்துதித்தாய்.
மண்ணுலக மாந்தர் விடிவிற்காய்
மன்னவா நீயும் மனுவுருவெடுத்தாய்.
அன்புள்ளம் கொண்டு என்புள்ளோர் எமக்காய்
இன்பமாய் நீயும் வந்துதித்தாய்
மாடடை ஆயர்கள் குடிலில்
மார்கழிக் குளிரில் கந்தைத் துணியில்
மானிடர் எமைக்காக்கும் தூய உள்ளத்தில்
மாணிக்க ஒளியாய் நீயும் பிறந்தாய்
மாணிக்கத் தொட்டிலும் மல்லிகைப் படுக்கையும்
மன்னவா உனக்கும்தான் இல்லை
மணித் தமிழீழத்து (எம்நாட்டு) மாந்தர்கள் படும்பாட்டை
மரணிக்கும் வாழ்வையும் சொல்லி முடியவில்லை.
மருந்தின்றிச் சாவையும் பட்டினிச் சோர்வையும்
அலைந்து உருக்குலையும் நாளாந்த நிகழ்வையும்
கலைந்து தொலைந்த அடிப்படை வாழ்வையும்
வார்த்தையில் வடிக்க முடியவில்லை.
ஏழையாய் பிறந்தவா எம்நாட்டின் விடிவிற்காய்
ஒளிகாட்ட வேண்டியே பாட்டிசைக்கின்றேன்.
எம்நாடு விடியவே இந்நாளில் வேண்டினேன்
பாலகா நீயும்
எம்நாட்டின் அமைதிக்காய் கண்மலர்வாய்
பாரினை மீட்கவே பாலனாய் வந்தவா
பாரினில் உன்புகழ் பாடுகின்றேன்.



-புஷ்பராணி ஜோர்ஜ்.

## பிறர் முதுகில் சவாரி!

வெட்கமில்லை...
உன்காலே
உனக்குச் சொந்தமில்லை!

தொலைந்துபோன
மண்
விண்
காற்று
இன்று...
பிறர் முதுகில் சவாரி!

போடா! போய்விடு
ஒரு தார்மீகத்தேடலில்
தொலைந்து போனவை...
கொஞ்சநஞ்சமில்லை!
ஓர் இனத்தின்
அடையாளமல்லவா அழிந்துபோனது!

இனி
கோபம்கொண்டு என்ன பயன்!
நமது தோல்களைத்தான்
பிறர் குளிர்காய கொடுத்தோமே!
இன்று நாம்
தோல்களற்ற தொல்காப்பியவாதிகள்!
வெட்கமில்லை...
எத்தனை காலத்திற்கு
பெருமைகளைப் பேசியே...
உரிமைகளை மிதித்திருப்பாய்!

நாம் என்ன வாழ்ந்துவிட்டோம்?
கடைசியாகக் கண்டது
கிழிந்த வேட்டி...
பழக்கப்படாத மொழி...
கடா வெட்டும் தீபாவளி...
பணம்சேர்க்கும் மதம்...
வேடம்போடும் உறவு...
உயிரிழந்த இலக்கியம்...



விலங்கிட்ட உரிமைகள்...

வெட்கமில்லை...
எல்லோரும் வீட்டை ஏலமிடுவர்
மண்ணை ஏலமிடுவர்
துணியை ஏலமிடுவர்
ஆட்டை...மாட்டை ஏலமிடுவர்!
நாம்....
நம்மையே ஏலமிட்டோம்!

— அருண்.

(மரண இரவுகள் கவிதைத் தொகுதியிலிருந்து)

# கைக்கெட்டாத கைபாத்துக்கள்.



-இராஜன் முருகவேல்.

அத்தியாயம் 11.

"அகல்யா வந்துவிட்டாள்!" பவளம் ரெலிபோனில் கூறினாள்.

"என் அகல்யா வந்துவிட்டாள்!" சந்தோசத்தில் கூவவேண்டும் போலிருந்தது. எண்ணாயிரம் கிலோமீற்றர்களுக்கு அப்பாலிருந்து எனக்காக, என் உறவுக்காக ஒரு உயிர் பறந்து வந்திருக்கின்றது.

"இதோ வந்துவிட்டேன் அகல்யா!.. இனிமேல் என்னால் உன்னைக் காணாமல் இருக்க முடியாது. உன்னைக் காணாத கண்ணும் கண்ணல்ல.உன்னை நினையாத நெஞ்சம் நெஞ்சல்ல. உடனே உன்னருகே வரவேண்டும். உன் முகத்தை.அதில்கொழுகொழுவென உருண்டோடும் கண்களை,கரிய கூந்தலை, காதில் ஆடும் ஜிமிக்கைகளை, முத்துப் பல்வரிசையை இத்தனைக்கும் மேலாக உன் சுவாசத்தை நான் அருகிருந்து நுகரவேண்டும்!"

"தம்பி எப்ப வாறீங்கள்... அகல்யா வந்ததிலையிருந்து பிரமை பிடிச்சவள் மாதிரி இருக்கிறாள்...!"

"ஊர் ஞாபகமாய் இருக்கும்!"

"நானும் அப்பிடித்தான் நினைக்கிறன்!"

"நான் எப்பிடியும் இண்டைக்கு வருவன்!"

மனம் படபடத்தது. ஒரு வேலையும் செய்யத் தோன்றவில்லை.
நேரில் எப்படி இருப்பாள்? என்னைக் கண்டதும் எப்படி வரவேற்பாள்? என்ன கதைப்பாள்? வெட்கத்தோடு ஒளிந்துகொள்வாளா? அல்லது பல நாட்களாகப் பழகியவள்போல் பாசத்துடன் பார்ப்பாளா? ஒரு கண்ணைச் சாய்ப்பாளா? உதட்டைக் கடிச்சுக்கிட்டு மெதுவாகச் சிரிப்பாளா? காலாலே நிலத்திலே கோலம்போட்டுக் காட்டுவாளா?
நினைக்கும்போது ஒருவகைச் சுகானுபவம் உடலெங்கும் பரவிப் பரவசமாக்கியது.
மணியைப்பார்த்தான். காலை பத்துமணி. இந்தநேரம் எந்தத்தமிழன் வேலை இல்லாமல் வீட்டில் இருப்பான்?
அதுவும் காருடன்!
யோசித்தான். சிலவேளை சோதி இருப்பான்.
ரெலிபோனை எடுத்துச் சோதியின் இலக்கங்களை அழுத்தினான்.
சோதி வீட்டில்தான் இருந்தான்.
"சோதி நேரமிருக்கே? அகல்யா வந்திட்டாள்!"
"அடிசக்கைஅப்ப உன்பாடு கொண்டாட்டம்தான்"
"உடனை போய்ப் பார்க்க வேணும்!"
"உனக்கில்லாத உதவியே? பின்னேரம் நாலுமணிக்கு ஆயத்தமாயிரு.வாறன்!"
"இப்ப வாவன்ரா!"
"இப்ப முடியாதுடா. அவசர அலுவலாய் வெளியிலைபோறன்.இவ்வளவு நாள் பொறுத்தனி, இன்னும் கொஞ்சநேரம் பொறுடா. அகல்யா எங்கையும் ஓடமாட்டாள்!"
மணியை மணியைப் பார்த்தான்.
நிமிடக்கம்பி மெதுவாக ஊர்வது போலிருந்தது.
இப்போது அகல்யா என்னசெய்வாள்? என்வரவை எதிர்பார்த்து அல்லாடுவாளா? பவளத்துடன் பேசிக்கொண்டிருப்பாளா? சாப்பிடுவாளா? புதிய சூழலை ஆச்சரியத்துடன் பார்த்து வியப்பாளா? புதிய உணவின் சுவைகளில் முகம் சுழிப்பாளா?
"என்ன அகல்யா?"
"என்னைப் பிடிச்சிருக்கா?"
சிரித்தான்.
"உண்மையைச் சொல்லட்டுமா?"
"ம்...."
"இஃ லீப டிஸ் அகல்யா!"
"விளங்கேல..."
"நான் உன்னை விரும்பிறன்."
"நானும்தான் சிவா!"
"இப்பிடித் தனிமையிலை இரண்டுபேரும் சொல்லுறது தவறு!"
"ஏனங்க...?"

"கிட்டவா சொல்லுறன்...!
"மாட்டன்!"
"ஏன்?!"
"கிட்ட வந்தால் நீங்கள் நீங்களாக இருக்க மாட்டீங்க...!"
"ஏண்டி...?"
எட்டி விரலைப் பிடித்தான்.
"வேண்டாங்க!"
முகம் குங்குமச் சிவப்பானது.
"நீ என் மனைவியடி!"
"இப்ப இல்லையே...!"
"எப்ப எண்டாலும் என்மனைவிதானே!"
அவள் அருகில் வந்து அவளது கலைந்த கேசத்தைக் கோதினான். அவள் இடுப்பைத் தொட்டான்.வளைத்து இழுத்தான். மற்றொரு கையை முதுகில் வைத்து இறுக அணைத்தான்.
கை சுட்டது.
அடிவரை வந்துவிட்ட சிகரட் தணல் கையைச்சுட பதறியடித்துத் துள்ளி நின்றான்.
சே...கனவு. எல்லாம் கனவு. பகல் கனவு. பசுமையான கனவு.
வெட்கமாக இருந்தது. சே... உறவைத் தேடியலையும் காமம். உதிரத்தைச் சூடாக்கும் காமம். காமமே விலகிப்போ!
"எட சோதி! எங்கையடா போனாய்? கெதியில் வாடா!"
சோதியை மனதினுள் திட்டித் தீர்த்தான்.
சோதி வந்தான். சிவராசனுக்கு முகம் மலர்ந்தது.
கடை ஒன்றினுள் நுழைந்தான்.
அகல்யா எப்படி இருப்பாள்? போட்டோவில் உள்ளது போலேயா? மெலிந்திருப்பாளா? அல்லது பருத்திருப்பாளா? ஒருவழியாக அழகிய சட்டையொன்றை வாங்கிக்கொண்டான். முதற்சந்திப்பின் முதற்பரிசு!
சோதி சிரித்தான்.
"என்னடா?"
"இதெல்லாம் கொஞ்சநாளைக்குத் தாண்டா.பேந்து பொம்பிளையள் ஒரு ஊசி கேட்டால்கூட வாங்கிக் கொடுக்க மாட்டாய்."
ஏண்டா?"
"நீயும் ஒரு ஆண்தானே?!"
கார் விரைந்தது.

□

சோதியும் சிவராசனும் போனபொழுது பவளமும் கனகரத்தினமும் எங்கேயோ செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள்.
"பிள்ளை அகல்யா! சிவா வந்திருக்கிறார்." என்று குரல் கொடுத்தாள் பவளம்.

"சிவா! பக்கத்திலை எனக்குத்தெரிஞ்ச ஆக்கள் இருக்கினம். நான் அங்கை போவிட்டு வாறன்!" என்று வெளியேறினான் சோதி.
பவளத்தின் அழைப்பைக் கேட்டும் அகல்யா வரவில்லை.
"தம்பி இந்தப்பிள்ளை வந்ததிலை இருந்து எதையோ பறிகொடுத்தமாதிரி யோசிச்சுக் கொண்டிருக்கிறாள். எந்த நேரமும் படுக்கைதான்.இப்ப பாரும். நான்கூப்பிட்டும் இன்னும்வரேலை.இவளுக்கு என்ன பிடிச்சுதோ தெரியேலை!" என்று கூறிவிட்டு அகல்யா படுத்திருந்த அறைக்குள் நுழைந்தாள்.
சிறிது நேரத்தில் வெளியே வந்தாள் அகல்யா.
கூந்தலை அழுத்தி வாரியிருந்தாள். கண்களில் ஒரு தளர்ச்சி. முகம் வாடிச் சிறுத்திருந்தது.
வலிந்த முகத்தில் புன்னகையை வரவழைத்தாள்.
அது அப்படியே தெரிந்தது.
"என்னதான் ரெலிபோனில் கதைத்தாலும் கடிதங்களைப் பரிமாறினாலும் முதர் சந்திப்பில் இப்படித்தான் போலும்!"
தனக்குள் சமாதானம் கூறிக்கொண்டான்.
"சிவா! நாங்கள் ஒருக்கா வெளியிலை போகவேணும். சோமசுந்தரத்தின்ரை மகளுக்குப் பிறந்தநாள். அதுதான் வெளிக்கிட்டுக்கொண்டிருக்கிறம். நீரும் அகல்யாவும் கதைச்சுக் கொண்டிருங்கோ. வரக் கொஞ்சம் நேரமானால் இங்கை படுத்துவிட்டு நாளைக்குப் போகலாம்தானே!"
மௌனமாகத் தலையசைத்தான்.
"நாகரீகம் தெரிந்த மனிதர்கள். தனியே விட்டுத் தள்ளிப் போகிறார்கள்!" மனதிற்குள் நன்றி கூறினான்.
"அகல்யா! தம்பிக்குக் கோப்பி போட்டுக்கொடு!"
அவர்கள் போய்விட்டார்கள்.
அகல்யாவையும் அவனையும் தவிர வேறு எவரும் இல்லை.
அகல்யா தலையைச் சாய்த்தவாறு நின்றிருந்தாள்.
சில நிமிடங்கள் மௌனத்தில் கனத்தன.
"அகல்யா..."
நிமிர்ந்து பார்த்தாள். முகத்தில் எவ்வித உணர்ச்சியும் இல்லை. அவனது பார்வையைத் தவிர்த்தாள்.
"இரு அகல்யா..."
சோபாவைக் காட்டினான். அமர்ந்தாள்.
"பயணம் எப்பிடி? மொஸ்கோவிலை ஒரு மாதம் கஷ்டப்பட்டிருப்பீர்.இப்ப எல்லாரும் மொஸ்கோவிற்குள்ளாலைதானை வரீனம்."
அவளின் முகத்தில் சிறு கலக்கம் தோன்றி மறைந்தது. உதட்டைக் கடித்துக்கொண்டாள்.
"என்ன அகல்யா...எதுவுமே கதைக்கமாட்டீராம்..." என்று ஏக்கத்துடன் கேட்டான்.
"இந்தாரும். உமக்காக வாங்கிக்கொண்டு வந்தனான்." என்று கடையில் வாங்கிய புதிய சட்டையைக் கொடுத்தான். தயங்கினாள்.

"ஏன் வாங்கக் கூடாதா?"
வாங்கினாள். விரல் நுனிகள் பட்டுவிடாமல் உரசியது. வெடுக்கெனக் கைகளைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டாள்.
கடிதத்தில் உணர்ச்சிகளைக் கொட்டி எழுதிய அகல்யாவா இவள்? ரெலிபோனில் கலகலத்தவளா இவள்?
ஏனிப்படி அந்நியமானாள்? முதல் அறிமுகம் என்பதாலா?
பொழுது கரைந்தது அதில் வெறுமை நிறைந்தது.
"கோப்பி குடியுங்கோவன்...!"
மெல்ல வாய்திறந்தாள்.
□

ஆசை யாரைத்தான் விட்டது?
பிறந்தநாள் விழாவுக்குச் சென்ற கனகரத்தினத்தையும் பவளத்தையும் ஆசை என்ற மாயை தன் வலையுள் சிக்க வைத்தது.அது நடேசனின் உருவில் வந்தது.
"கனகு!... பெறாமகள் வந்திருக்கிறாளாமே...?!"
"ஓமோம்... கெதியிலை கலியாணம் நடக்கப் போகுது!"
"பொடியன் வசதியானவனே? காசுபணம் வைச்சிருக்கிறானே? கார் இருக்கே?"
"இல்லை...!"
"காலவரையறையற்ற விசா?"
"அதுவும் இல்லை!"
"என்ன கனகு. நீ எந்தக் காலத்திலை இருக்கிறாய்? ...கார் இல்லை. நல்ல விசா இல்லை...இவனை எங்கை பிடிச்சனி?"
"வந்து...!"
"உன்ரை சொந்த மகளாயிருந்தால் இப்பிடி ஒண்டுமில்லாதவனுக்குக் கட்டிக் கொடுப்பியா? ஒரு நல்ல மாப்பிள்ளை கிடைக்கேல்லையே?"
"அவன் சீதனமா ஒண்டும் கேட்கேல்லை.நல்ல குணமான பொடியன்!"
"இந்தக்காலத்திலை குணம் எந்தமூலைக்கு? எல்லாத்துக்கும் பணம் பணம். பணமில்லாட்டி ஆரும் மதிக்கமாட்டினம்.நீ செலவழிச்சுக் கூப்பிட்டதை ஆரும்சொல்லமாட்டினம்.ஒண்டும் இல்லாதவனுக்குக் கட்டிக் கொடுத்ததைத் தான் கேவலமாய்ப் பேசுவினம்...."
சிந்தனையில் ஆழ்ந்தார் கனகரத்தினம்.
"என்னட்டை ஒரு மாப்பிள்ளை இருக்கு. கார்வைச்சிருக்கிறான். காலவரையறையற்ற விசா. நல்ல வேலை."பாங்கிலை" எக்கச் சக்கமாகக் காசு வைச்சிருக்கிறான்.
சீதனம் கேட்கமாட்டான். கலியாணத்தைக் கூட தன்ரை செலவிலை நடாத்துவான்."
"இப்ப சொல்லி என்ன பிரயோசனம்? முந்தித் தெரியாமைப் போச்சே!"
கைகளைப் பிசைந்தாள் பவளம்.

இப்ப ஒண்டும் குடி முழுகேல்லை. நீங்கள் சரி எண்டு சொல்லுங்கோ. மற்றதை நான் பார்க்கிறன்.நீங்கள் ஏஜன்சிக்குச் செலவழிச்ச காசைக்கூட பொடியனிட்டை வாங்கித்தாறன்..."

"மெய்யாயோ...?" என்று ஆச்சரியமாகக் கேட்டார் கனகரத்தினம்.

"பொய்யே சொல்லுறன்?"

ஆசை யாரைத்தான் விட்டது?


மாதவன் வீட்டில். "சீதனமில்லாமை மாப்பிள்ளை எடுத்துப் போடு பார்ப்பம்" என்ற சிவநேசனின் சவால் நினைவுக்கு வந்தது.

"சிவநேசா! நடத்திக் காட்டுறன்"

மனதிற்குள் எக்காளமிட்டார் கனகரத்தினம்.

(தொடரும்)

## கவலைக்கு மருந்து.



கவலையின்றி வாழவேண்டுமென்றால்
கடந்த காலத்தையும் எதிர்காலத்தையும்பற்றி
அலட்டிக்கொள்ளாமல் இருப்பதுதான் ஒரே வழி!
"கீதையிலிருந்து ஒரு தத்துவம் சொல்!" என்று
யாரைக்கேட்டாலும்
"கடமையைச்செய். பலனை எதிர்பார்க்காதே!"
என்று பட்டென்று சொல்வார்கள்.
என்றாலும் இந்த ஒற்றை வாக்கியத்துக்குள்
புதைந்துகிடக்கும்பொருளைப் பலர்
முழுமையாகப் புரிந்துகொள்வதில்லை.!
பலன் என்பது எதிர்காலம் சம்பந்தப்பட்டது.
கடமை என்பது நிகழ்காலம்!
எதிர்காலத்தைப்பற்றிய கவலையும் பதட்டமும்
வந்தால் நிகழ்காலம் நிலைதடுமாறும்.
அதனால்தான் அதை நினைக்கவேண்டாம் என்பது.
-சுவாமி சுகபோதானந்தா.

## அன்றில் பறவை.

தூக்கத்தை தொலைத்து
தனிமையில் தவிக்கிறேன்
கலங்கிய கண்களில்
கண்ணீரும் காய்ந்தது
நெஞ்சத்தில் ரணங்கள்
ஆறாத வடுக்களாக
இதயத்தைத் துளைக்க
இரவெல்லாம் எனக்கு
சிவராத்திரி ஆகின
யாரிடம்கூறிட
நான் படும் துன்பத்தை
என்னருகில் நீ இருந்தால்
அனைத்தையும் ஆற்றிடலாம்
இன்று
எதற்குமே வழியற்று
மனதிற்குள் புதைந்து
மௌனமாக அழுகிறேன்
யார்செய்த பாவமிது
கண்ணீரால் கழுவி
காயத்தை மாற்றுகிறேன்

அழுதழுது என் கண்கள்
ஏழையானது
நீர் எல்லாம் இன்று
சேறாக மாறியதேன்
பூக்கூட என்னை
முள்ளாக தைப்பதேன்
தலைவிதி என்பது
என்
கவலைக்கு மருந்தானது

தனியனாக நான்மட்டுமா?
இல்லை
எனைப்போலப் பலரிங்கே
உறவைப் பிரிந்து
அவதியுறுகின்றார்
சிலர் அதை மதுவால்
மறைக்க முனைகிறார்
இன்னும் சிலர்
புகைவிட்டு ஆற்றுகிறார்
எனக்கு ஏதுவழி
சிந்திக்க முடியவில்லை
சரி தவறு எதுவென்று
பகுத்தறிய முடியவில்லை
ஏன் அனைத்தையும் நீ
அழித்துவிட்டு அல்லவா
சென்றுவிட்டாய்
உறவுகள் அங்கே
உயிர்கள் இங்கே
சுயநலக்காரனாய்
நான்மட்டும்
தப்பி வந்துவிட்டேன்
என் உறவின்
அங்கங்கள்
அங்கே இருக்கையில்
நான் பகட்டாக
உடையணிந்து
அவனி எல்லாம் பவனிவர
என்னால் முடியவில்லை
ஏன் எனில்
நான் ஒரு
அன்றில் பறவை.

— கு. ஞானக்குமாரன்.

## கஜனின் கவிதை வரிகளிலிருந்து.....

காலம் காலமாய்
ஆதிக்கங்கள்....
அராஜகங்கள்....
அடக்குமுறைகள்...
இந்த
அந்நியப் பாதங்களில்
அழுந்திக் கொண்டிருக்கிறது
ஈழத்தின் தலைவிதி!

வளைந்து வளைந்து
எங்கள்
முதுகெலும் பெல்லாம்
இற்றுப் போனதால்
நரம்பு வேர்கள்
தாகம் கொண்டது
சுதந்திரம் வேண்டி!

ஏகாதிபத்தியங்களின்
ஏகபோக மாளிகை
மயக்க போதையில்
அரசியல் தலைவர்களின்
உணர்ச்சி வசனங்களால்
எம் மக்கள்
தலை அறுந்து....
உடல் சரிந்து.....
உயிர் பிரிந்து...
ஆண்டுக் கொருதரம்
முகூர்த்தம் குறித்துக்கொண்டன
கலவரங்கள்!

இளம் காற்றுக்கள்
போர்க்கொடி
தூக்கையில்
இலவம் பஞ்சுகள்
இந்தியாவின் காலடியில்
வீழ்ந்து கிடந்தன-
சிங்கள ஆதிக்கம்
எங்கள்
நெஞ்சிலே உதைத்தது.

காந்தியம்....
அகிம்சை....
மனிதநேயம்...
சமாதானம்....
இந்த சொற்சித்திரக் காரர்கள்
எங்கள்
முதுகுக்குப் பின்னால்
ஈட்டி முனைகளைச்
கூர்பார்த்துக் கொண்டனர்.

ஆதிக்கக் கரங்களின்
இரும்புப் பிடிக்குள்
கண்ணீர் வடிக்கிறது
ஈழத்தின் தலைவிதி!

ஒரு
புதிய விடியலுக்காய்
அண்மையில் கேட்கிறது
துப்பாக்கிப் பூபாளம்!

மௌன இரைச்சலில்
மோனத் தவமிருக்கும்
இருள் முனிவனை
பல
சேவலின் கூவல்கள்
நிஷ்டை கலைக்கும்!
யானைக் கூட்ட
முகிற் காட்டுக் கருமை
கழுவி
நில வானின் வீதியெங்கும்
குருதிமையெடுத்து
சிவப்புக் கோலமிடும்
அந்த
புதிய புலர்வுக்காய்
உயிரை உருக்கும்
இளைய மெழுகுவர்த்திகள்....
அந்த விடுதலை வேள்வி
தானமாய் கொண்ட
அப்பாவி உயிர்கள்...

பனித் தேசத்து
வசதிகளின் போர்வையில்
குளிர் காய்கின்ற
ஈழத்து வித்துக்களே
எம்
மண்ணின் அவலங்களுக்கு
கை கொடுக்க
கொடுங்களேன்!

-கஜன்.

 (கலைச்சுடர் மலர் இதழ் 1988)

படைப்பாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க

# பூவரசு

7வது ஆண்டு நிறைவு

**சிறுகதை கவிதை கட்டுரைப்போட்டிகளின்**
**முடிவு திகதி 20.12.97 வரை நீடிக்கப்பட்டுள்ளது!**

சிறுகதை:
மேலைத்தேச-கீழைத்தேச கலாச்சாரப் பின்னணியைச் கருவாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.

கவிதை:
"எங்குதான்செல்வாய் இனி?"
என்ற தலைப்பில் எழுதப்படவேண்டும்.

கட்டுரை:
"மண்ணும் மனிதமும்!"
என்ற தலைப்பில் எழுதப்படவேண்டும்.

**போட்டி முடிவுகள் பூவரசு 7வது ஆண்டு நிறைவு மலரில் வெளியாகும்.**

இனிய தமிழ் ஏடு.

நெடுங்கதை



# காயத்திரி

–ப. இராஜகாந்தன்.

(இறுதிப்பகுதி)

கிணற்று நீரின் குளுமையும் மரநிழலின் தண்மையும் உடலுக்கு இதமளித்தன.

அவ்வேளை சிறிராமின் நினைவு எட்டிப்பார்த்தது.

'இந்தப் பயங்கரமான காலகட்டத்தில் இங்கு வரப்போகிறாராமே! இது தற்கொலைக்குச்சமமானது. அவர் வந்தாலும், அது அண்ணனைவிடுவிக்க எந்தவகையிலும் உதவாது என்பது தெரிந்தவிடயம். விடுதலை உணர்வும் தமிழார்வமும் மிக்க சிறிராம், இன்று இவைகளை மறந்திருப்பாரோ?! அல்லது ஊருக்கு வந்து விடுதலைப்போராட்டத்தில் சேர்ந்து கொள்ளப் போகிறாரா?'

இவ்வாறான எண்ணங்கள் கீதாவின்மனதில் அலைமோதிக் கொண்டிருக்கும் போது, "கீச், கீச்" என்றொரு சத்தம் கேட்டது.

அண்ணாந்து பார்த்தாள்.

அங்கே வல்லூறொன்று கோழிக்குஞ்சொன்றை கால்களில் இடுக்கிய வண்ணம் பறந்து சென்று, நீண்டுயர்ந்த ஒற்றைப் பனையொன்றில் அமர.... கோழிக் குஞ்சின் சத்தம் மெதுவாகக் குறைந்து ஓய்ந்தது.

கலகக் குருவிகள் வானத்தில் மிகுந்த சத்தத்துடன் தலைக்கு மேலாகக் கத்திக் கொண்டு செல்ல, கீதாவின் கவனம் சிதறியது.

தூரத்தே வயோதிபரொருவர் சோடி மாடுகளுடன் அவளிருந்த இடத்தை நோக்கி வந்தார். இவள் ஊருக்குப் புதிது என்பதைப் புரிந்து கொண்டவராக,

"ஏன் பிள்ளை... ஆர் நீ... இந்த நேரத்திலை..?!" என்று பதட்டத்துடனும் ஆச்சரியத்துடனும் கேட்டார்.
அவரின் கேள்வியில் ஏதோ வல்லைவெளியில் நடுச்சாமத்தில் நிற்கிற பெண்ணைக் கேட்பதுபோன்ற பாவனை...
"நான் நீரவேலிக்கு மாமா வீட்டை போறன்... இதிலை கொஞ்சநேரம் தண்ணி குடிச்சுவிட்டு களைப்பாறுறன்..."
"உனக்கு நிலமை தெரியாதே பிள்ளை...நீர்வேலியிலை இருந்து ஆமிக்காரன் எறிகணையளை வீசி எல்லாத்தையும் அழிச்சுக்கொண்டு வாறான். ஒரு வீடும் மிச்சம் இல்லை. எல்லாம் தரைமட்டம்... எல்லாரும் இடம்பெயரினம்.... நானும் இந்தமாடுகளுக்குத் தண்ணிகாட்டக் கொண்டுவந்தனான்... கனதூரம் நடக்க வேணுமெல்லே...! சனமெல்லாம் கையிலை அகப்பட்டதுகளை எல்லாம் எடுத்துக் கொண்டு பிள்ளை குட்டியளோடை சாவகச்சேரிக்கும் வன்னிக்கும் கிளிநொச்சிக்கும் எண்டு ஓடுதுகள்.... நீ என்னடாவெண்டால் நீர்வேலிக்குப்போறன் என்கிறாய்...!" என்று மூச்சுவிடாமல் படபடத்துவிட்டு, அவளின் பதிலை எதிர்பார்ப்பதுபோல அவளை உற்றுப் பார்த்தார்.
அவள் வானத்தை வெறித்துப் பார்த்தவண்ணம் நின்றிருந்தாள்.
'முழுக்க நனைந்த பின்பு முக்காடு எதற்கு?' என்ற எண்ணம் வலுவாக, உள்ளம் இறுக்கமானது.
"சரி... பாப்பம்..." என்று பதிலளித்துவிட்டு தொடர்ந்து நடந்தாள்.
தொலைவில்தெரிந்த பிரதானதெருவை நெருங்க, நெருங்க ஆள்நடமாட்டம் கூடியது. கூட்டம் கூட்டமாக மக்கள் நகர்ந்து கொண்டிருந்தார்கள்.
மாலதியின் வீட்டுக்கு இன்னும் ஒரு கிலோ மீற்றர் தூரம்தான் இருக்கும். ஆனால் அங்கே செல்லவேண்டாமென்று தடுத்தார்கள் தொண்டர்கள்.
மகத்தான மக்கள் உயிர்கள், முட்டாள்தனமாக எதிரியின் எறிகணைக்கு இரையாகாமல்பாதுகாப்பதற்காக, மக்களை அப்புறப்படுத்திக்கொண்டிருந்தனர் தொண்டர்கள்.
மக்களின் பரபரப்பு, தொண்டர்களின் சுறுசுறுப்பு ஆகியவற்றை அதிசயித்துப் பார்த்து நின்ற கீதாவை யாரும் கவனிக்கவில்லை.
இவள் தானாகவே ஒரு தொண்டரை நாடிச்சென்று, தான்வந்த விசயத்தைக் கூறி, தேடிவந்த விலாசத்தைக் கேட்டாள்.
அத்தொண்டர் பக்கத்தில் தற்காலிகமாக இயங்கிக் கொண்டிருந்த ஓர் அலுவலகத்திற்குக் கூட்டிச் சென்றார்.
அங்கு அவள் மாலதிபற்றிய விபரங்களைக் கூறினாள். தொண்டர்கள் பொறுப்பெடுத்த பெயர்ப்பட்டியலில் பார்த்து,நோயாளியான மாலதி அருகிலுள்ள பள்ளிக்கூடத்தில் தற்காலிகமாகஇருப்பதாகவும், அங்குள்ளவர்கள் எல்லோரும் அன்றிரவு செஞ்சிலுவைச்சங்கத்தின்உதவியுடன் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல இருப்பதாகவும் சொல்லி விலாசத்தைக் கொடுத்தார்கள்.
நோயாளரைமட்டுமே அப்பகுதியில் வைத்திருந்ததால், மாலதியின் தந்தை அவளைத் தொண்டர்களிடம் ஒப்படைத்துவிட்டு, இடம்பெயரும் மக்கள் கூட்டத்துடன் செல்ல வேண்டியதாயிற்று. கணவனையும்... தற்காலிகமாகத்

தந்தையையும் பிரிந்திருந்த மாலதிக்குக் கீதாவின் வருகை பெரிய ஆறுதலளித்தது. கால் இழந்து கையிழந்து அங்கு இருப்பவர்களுடன் தம்மை ஒப்பிட்டு, அப்படி இல்லையே என்று ஆறுதல் அடைவதைத் தவிர அவர்களுக்கு வேறுவழி தெரியவில்லை.

தனது கணவன் ராகவனுடன் வந்த அத்தனை ஆண்களையும் சில பெண்களையும் இராணுவம் காரணமின்றிக் கைதுசெய்ததாகவும், பிரசவத்திற்கு இன்றோநாளையோ என்று இருந்த கோலத்தில் தன்னைவிட்டு விட்டதாகவும், தான் அங்கே வந்து சேர்ந்தவிதம்பற்றியும் அழுகையுடன் கூறிமுடித்தாள் மாலதி.

அன்றிரவு தொண்டர் வாகனம்வந்து நோயாளிகளை ஏற்றிச் செல்லும் என்று அங்கே பலர் கதைத்தார்கள். அர்த்தசாமமாகியும் எதிர்பார்த்திருந்த வாகனம் வரவில்லை. எறிகணைகளின் இடிமுழக்கம் தொடர்ந்து ஒலித்து, நோயாளிகளின் மனதில் பீதியை அதிகமாக்கியது.

திடீரென அங்கே பரபரப்புண்டானது.

நோயாளரை ஏற்றிச் செல்லவந்த வாகனம் இடைவழியில் எறிகணைத் தாக்குதலுக்கு உள்ளாகிவிட்டதாகப் பேசிக் கொண்டனர்.

அடிக்கொருஇடமாய் நொடிக்கொரு தடவை எறிகணைகள் வீழ்ந்தபோது.... ஒவ்வொரு நொடியும் யுகங்களாய்க் கழிந்தன.

திடீரென தொண்டரொருவர் அங்கே வந்து, "இனியும் இங்கிருந்தால் ஆபத்து.. நடந்தாவது போவோம்.. வாருங்கள் என்று எல்லோரையும் அவசரமாக அழைத்தார். எந்தநேரத்திலும் உதவி செய்யும் மனதுடைய இளைஞர்கள் யுவதிகள் பலர் நோயாளரைக் கைத்தாங்கலாக நடத்திவர, அர்த்தசாமத்தில் அவர்களின் பயணம் ஆரம்பமானது.

பெருநதியில் கலக்கின்ற கிளையாறுகளாக அவர்கள் வலிகாமத்திலிருந்து வந்த பெரிய கூட்டத்துடன் சேர்ந்துகொண்டார்கள்.

மழைமேகம் கண்டு வெளிக்கிளம்பும் புற்றீசல்கள்போல, போர்மேகங்கண்டு வெளியேறும் குடிமக்கள் இவர்கள்!

"இந்தியாவிலை இருந்து பாகிஸ்தான் பிரிந்தபோது.... பாகிஸ்தானிலை யிருந்தும் பர்மாவிலை இருந்தும் திரும்பிவரேக்கை இந்துக்கள்பட்ட வேதனைகளை நாம் படிச்சிருக்கிறோம்.... அதை இண்டைக்கு நேரிலை அனுபவிக்கிறம்...."என்றாள் கீதா.

மாலதியால் பதில் கூற முடியவில்லை. வறட்சியாகப் புன்னகைத்தாள்.

கீதா பிடித்துவர மாலதியும் நடந்தவாறிருந்தாள்.அவளது அழகியமுகத்தைக் கவலை ஆக்கிரமித்திருந்தது. அழுவதற்குக்கூட நேரமில்லை.

கீதாவுக்கும்.... வயதான தாயும் ஒரு கால் முடமான தந்தையும் என்ன ஆனார்களோ என்ற சிந்தனை....!

நாய்களும் மக்களைப் பின்தொடர்ந்தன. அவைகளை விரட்ட முடியவில்லை. வீட்டு நாய்களல்லவா.... எஜமானர்கள் பின்னே வந்துகொண்டிருந்தன....

அவ்வப்போது புனர்வாழ்வுக் கழகத்தினர் ஒலிபெருக்கிமூலமாக மக்களுக்கு ஆறுதலும் நம்பிக்கையும் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

தாகத்துக்குத் தண்ணீர் வழங்கினார்கள். இன்னும் ஒரு கிலோமீற்றர் தூரத்தில் யாவருக்கும் பால்கஞ்சி கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதாக அறிவித்தார்கள்.

வந்தாரை வாழவைத்து வாசலிலே இளைப்பாற
வாசலிலே திண்ணையமைத்து விருந்தோம்பி வாழ்ந்த தமிழினமே
பிறந்த மண்ணைவிட்டு நீ இடம்பெயர்ந்து செல்வதேனோ?
வீதியிலே செல்பவர்க்கு வாசலிலே வீடமைத்த பாசமுள்ள தமிழினமே-நீ
வீடிழந்து வீதியிலே, யாரறிவார் உன் வேதனையை?!
கைதாங்க ஒரு குழந்தை, மூத்ததுவோ முந்தானையில்-நீ
முன்னோக்கிச் செல்வதெங்கே, முன்னோரின் மண்ணைவிட்டு
பூவிழந்து பொட்டிழந்து பெற்ற பிள்ளையினைப் பலிகொடுத்து
மாரடித்துப் புலம்புகின்ற மாதர்களின் ஓலங்கள்- உங்கள்
காதுகளில் கேட்கலையோ? கழிவிரக்கம் காட்டீரோ??
நேற்றுவரை இவர் வாழ்ந்த ஏற்றமிகு வாழ்விழந்து
வேப்பமர நிழல்தேடி வீற்றிருக்கும் வேதனையை
பார்க்கவும்தான் முடியலையே! காற்றுக்கொரு திறனுண்டோ
இவர் கண்ணீரைத் துடைப்பதற்கு...?!

குறிப்பிட்ட இடத்தை அடைந்ததும் தொண்டர்கள் சுறுசுறுப்பானார்கள். நோய்வாய்ப்பட்டவர்களுக்கு முதலுதவிவழங்கப்பட்டது. பனடோல், டிஸ்பிறின் போன்ற மருந்துகள் கொடுக்கப்பட்டன. பனையோலையிலான பிளாவில் பால்கஞ்சி வழங்கினார்கள்.

அவர்களின் பசிக்கு அது அமிர்தமானது!!

பசிக்களை தணிந்ததும் பெற்றோர்கள் கையில் கொண்டுவந்த பாய் துணிகளை விரித்துப் பிள்ளைகளைப் படுக்க வைத்தார்கள். அநேகமானோர் நடந்த களைப்பால் தூங்கிவிட்டார்கள்.

ஒருசிலர் விழித்துக் கொண்டிருந்தார்கள். பிறந்த மண்ணைவிட்டுப் பிரிந்த வேதனை... இதில் கீதாவும் மாலதியும் அடக்கம்..!

விடிந்தது... அந்த இடம் அன்னதானம் செய்யப்பட்ட இடம்போலச் காட்சியளித்தது. காகக் கூட்டங்களின் ஆக்கிரமிப்பு.... தூரத்தே நாய்களின் ஊளையிடும் ஒலிகள்.... இவற்றிடையே கேட்ட ஒலிபெருக்கி அறிவித்தலால், இருந்தவாறே தூங்கிக்கொண்டிருந்த கீதாவும் மாலதியும் விழித்துக் கொண்டனர்.

அப்பொழுது ஒலிபெருக்கியில் ஓரிளைஞன் பேசுவதற்கு ஆயத்தமானான். பதினாறு வயதுதான் மதிக்கலாம். அவனது மிடுக்கான தோற்றம் அவனை ஒரு போராளியாக நினைக்க வைத்தது.

அவன் பேசத் தொடங்கினான்.

தமிழீழத்தின் தவப்புதல்வர்களே! தாய்மார்களே! பெரியோர்களே!!

நாம் இன்று எமது உடமைகளையும் பாரம்பரிய நிலத்தையுமிழந்து அகதிகளாகஇருக்கின்றோம். காலங்காலமாகஅன்னியரின் படையெடுப்புக்களால் அழிந்த இனங்களைப்பற்றிச் சரித்திரம் கூறும். டில்லிமீது படையெடுத்த முகம்மதியர் ஒரேமுறையில் இலட்சக்கணக்கான பொதுமக்களைக் கொன்று

(தொடர்ச்சி 54ம் பக்கம்)

# பலதும் பத்தும்

## இழப்பினில் இலாபம்!

நாலும் நடக்கட்டும் நாட்டினிலே. நமக்கு இலாபம் எட்டமுடிந்தால் அதுவே சாலச்சிறந்தது என்று நினைப்பவர்கள் நம்மிடையே இல்லாமல் இல்லை.

இளவரசி டயானா இறந்தது பலரைக் கண்ணீர் வடிக்கவைத்தது நிஜந்தான் என்றாலும், எழுத்துலக ஜாம்பவான்களுக்கு எண்ணற்ற கோடிகளைச் சம்பாதிக்கவும் வழி சமைத்துச் கொடுத்துள்ளது போலும்.

☐ அன்ட்ரூ மோர்ட்டர்ன் என்பவர், தன் கைவசம், டயானாவின் எண்ணங்களைப் பதிந்த ஒரு ஒலிநாடாவைக் கைவசம் வைத்திருந்தார். நியூயோர்க்கிலுள்ள ஒரு சஞ்சிகைக்கு கடந்த ஒக்டோபர்மாதம் இதை இவர் விற்றுள்ளார். இதற்கு இவருக்குக் கிடைத்த பணம் 100,000 ஸ்டேலிங் பவுண்ட்ஸ்!

☐ செப்டம்பர் மாதக் கடைசியில், டயானாவின் சுயசரிதையை, சற்றேமாற்றி மீண்டும் எழுதிப் புத்தக வடிவில் கொண்டுவந்த அன்ட்ரூ மோர்ட்டன்,இதில் ஒருபகுதியைப் பத்திரிக்கையில் பிரசுரிக்கக் கொடுத்துள்ளார். "ரைம்ஸ்" என்ற பிரபல்யமான ஆங்கிலப்பத்திரிகை 13,000சொற்கள் கொண்ட இந்த விடயத்தை 4நாட்கள் தொடர்ந்து பிரசுரிக்க, 100,000 ஸ்டேலிங் பவுண்ட்ஸை தாரை வார்த்துள்ளதாம். (பி.கு.— சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை. இந்த 4நாட்களில் விற்பனை 70,000 என்று சாதனை படைத்ததாம்)


இறப்பிற்குப் பின்புதான், டயானாவை வைத்து எழுத்துலகம் கொள்ளை கொள்ளையாகச் சம்பாதித்தது என்றும் கூறுவதற்கில்லை.

1992 இல் "டயானாவின் உண்மைக்கதை" என்ற பெயரில் ஒரு நூலை முதற்தடவையாக வெளியிட்ட அன்ட்ரூ, புத்தக வியாபாரம் மூலம் 1.2 மில்லியன் பவுண்ட்ஸ் சம்பாதித்துள்ளார்.

ஏ. ஜே. ஞானேந்திரன்.

டயானாவையும், ராஜகுடும்பத்தையும் வைத்து வெளியிடப்பட்ட நூல்கள்சிலவற்றின் பகுதிகளை 1993 மேமாதம் லண்டன் டெயிலிமிரர் பத்திரிகை தொடராக வெளியிட்டது. இதற்காக கொலின் காம்ப்பெல் என்ற பெண்மணிக்கு 20,000 பவுண்ட்ஸ் ஊதியமாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

.........இருந்தும் ஆயிரம்பொன் இறந்தும் ஆயிரம் பொன் என்ற கதைதான்!




## ஏறுநிலையில் எயிட்ஸ்.

மனிதன் நெறிகெட்ட நிலையில் நடக்கத்தலைப்பட்டு விட்டான் என்று படைத்தவன் எண்ணத் தலைப்பட்டு விட்டதால்தான், மனித அழிவைப் பெரிதாக ஏற்படுத்தும் நோய்களினை அனுப்பி வைக்கின்றானோ என்று நினைக்கத் தோன்றுகின்றது.

இந்தப் புதிய யுகத்தை பெரும் அழிவுக்கு உள்ளாக்குவதில் பெரு வெற்றி கண்டிருப்பது எயிட்ஸ்! இதனுடைய கைவரிசை இன்றுவரை உலகநாடுகளெங்கும் கோடிக் கணக்கானவர்களைப் பாதித்துள்ளது. சில மேற்கத்தியநாடுகள்,இந்த எயிட்ஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதில் ஓரளவு வெற்றிகண்டிருந்தாலும், ஆசிய நாடுகளின் அவலமோசொல்லத்தகாத அளவில் மோசமாகிக் கொண்டே போகின்றது.

1990களின்ஆரம்பத்தில் இருந்ததை விட, 71தடவைகள் அதிகமாக எயிட்ஸின் தாக்கம் இந்தியாவில் வளர்ந்துள்ளது என்பது நம்மை அதிரவைக்கும் செய்தி என்பதில் சந்தேகமில்லை!

"ஏஸியாவீக்" என்ற இந்தச்சஞ்சிகையின் சமீபத்திய அறிக்கையின்படி, எயிட்ஸ் பாதிப்பில் 57வது இடத்தை (முழு உலகிலும்)வகித்த தாய்லாந்து, 1990இன் நடுப்பகுதிகளில், 5வது இடத்திற்கு மேலேற்றப்பட்டு, கணிசமான "முன்னேற்றம்" கண்டுள்ளது. கம்போடியா 159வது இடத்தில் இருந்து 59வது இடத்திற்கு போயிருக்கின்றது.


இப்படியான மோசமான நிலை காரணமாக ஆசியாவில் எயிட்ஸ் தனது ஆட்சியை நன்றாகவே பிடித்து வைத்துக்கொண்டுள்ளது. சில ஆசிய நாடுகள் உல்லாசப் பயணிகளின் வருமானத்தையே நம்பியிருப்பதால், சம்பாதித்துக்கொண்டவினை என்றும் இச் சஞ்சிகை வர்ணிக்கின்றது.

இல்லாத கொடுமை பொல்லாததுதான்!

## மர்மமான மனைவி.

எழுத்தாளர்கள் வெளிநாடுகளில் தமது படைப்புக்கள் மூலம் ஏராளமாகவே சம்பாதித்து வருகிறார்கள். ஆனால் இப்படிச் சம்பாதிப்பதிலும் அவர்களுக்கு இடர்கள் குறுக்கிடாமல் இருப்பதில்லை.

பிறப்பால் இந்தியரானாலும், இன்று பிரிட்டனின் பிரஜையாக வாழும் சல்மான் ருஷ்டி என்பவர் உலகப் பிரபல்யமான ஓர் எழுத்தாளர். இவர் தன் எழுத்துக்களால் வம்பை விலைக்கு வாங்கிக் கட்டிக் கொண்டவர். "சாத்தானின் வரிகள்" என்ற இவரது நூல் விற்பனையில் சாதனை படைத்தது மாத்திரமல்ல, இவரது தலையை வாங்கவென்று, ஒரு அரசே தேடுதல் வேட்டை நடாத்துமளவிற்கு கீர்த்தியைச் சம்பாதித்துக்கொடுத்துள்ளது. "இவரது தலையைக்கொய்யுங்கள்!" என்று ஈரானின் மாஜி ஆன்மீகத் தலைவர் கொமேனியின் ஆணை இன்றும், நடைமுறையில் இருப்பதால் மறைந்து வாழும் துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகி இருப்பவர் இவர்! (அப்படி ஒளித்து இருந்தும் சர்ச்சைக்குரிய நாவல்களை வெளியிடப் பின் வாங்காத எமகாதகன் இவர்.) 1989இலேயே இவரைக் கொல்லும்படி உத்தரவுபிறப்பிக்கப்பட்டது. இந்த எமகாதக எழுத்தாளர் இப்பொழுது மூன்றாவது தடவையாகத் திருமணஞ் செய்திருப்பது, இன்றைய சூடான செய்தி. ஆனால் இவர்யார் என்பதை மர்மமாகவே வைத்திருக்கிறார். தலை(தன்) தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று ஆறுதல் பட்டிருக்கும் இவர், அந்தப்பட்டியலில் மனைவியின் பெயரையும் இணைக்க விரும்பாததால் தன் புதிய இல்லக் கிழத்தியை மர்மமான ஒருவராகவே வைத்துள்ளார். பெயர்மட்டும் எலிஸபெத் என்கிறார்.



## மலிந்துவிட்ட மனிதவதை.

ஆட்சியின் அதிருப்தியால், வெடிக்கும் வன்முறைகள், அநியாய உயிர்ப்பலிகள் எடுத்து வருகின்றன. உலகளாவிய ரீதியாக, இன்று பல நாடுகள் இப்படியான பாதிப்புக்களினால் ஆடிப்போயிருக்கின்றன.
ஆனால் ஆபிரிக்கநாடான அல்ஜீரியா, இந்த வன்முறைகளில் உலகநாடுகள் எல்லாவற்றையும் மிஞ்சிவிடும் வண்ணம், வெகுவாய் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுவருகின்றது.
ஏன் இந்த இரத்தக்களரி?
1991ல் இடம்பெற்ற ஒரு சுதந்திரமான தேர்தலில் வெற்றியீட்டிய இஸ்லாமியமீட்பு முன்னணிக்கட்சியின் வெற்றியைச் செல்லுபடி யாகாதது என்று இராணுவம் அறிவித்த காலம் தொடக்கம் வெடித்த போர் இன்றுவரை தொடர்கின்றது. இந்த உள்நாட்டு யுத்தம் இன்றுவரையில் 60,000பேரை உயிர்ப்பலி எடுத்துள்ளது என்கிறார்கள். கொலையாளிகள் தமது வேட்டையில் இறங்கும் போது வயதுவித்தியாசமோ அல்லது ஆண்பெண் என்ற வித்தியாசமோ பார்ப்பதில்லை.
குழந்தையாக இருந்தாலென்ன, குமரியாக இருந்தாலென்ன, குடுகுடுகிழவியாக இருந்தாலென்ன, அப்பாவிப்பொதுமக்களை சுட்டுத்தள்ளுவதோ, வெட்டித்தள்ளுவதோ தொடர்கின்றது.
இந்த ஆண்டு தீவிரமாகி இருக்கும் இந்தப் போரின் சில மனதை உருக்கும் விபரங்கள் —

☐ ஜனவரி:- 143 கிராமத்தவர்கள் அநியாயமாகக் கொல்லப் பட்டார்கள்.

☐ பெப்ரவரி-மார்ச்:- இராணுவம் பதிலடி கொடுக்கும் முகமாக ஆயுதமேந்திய 328 இஸ்லாமிய தீவிரவாதிகளைக் கொன்று தீர்க்கின்றது.

☐ ஏப்ரல்-யூன்:- 11கிராமங்களில் குறைந்தபட்சம் 310 அப்பாவி மக்கள் கொல்லப்பட்டார்கள். ரயில், பஸ், சினிமா தியேட்டர் போன்றவற்றில் குண்டுகள் வெடித்தே அனேகமானோர் கொல்லப் பட்டார்கள்.

☐ யூலை:- இந்தமாதத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரம், அனேகமான நகரங்களையும், கிராமத்தையும் தொடர்ந்து ஏழுநாட்கள் ஸ்தம்பிக்க வைத்தது. மொத்த உயிர்ப்பலி 315.

☐ ஆகஸ்ட்:- வன்முறைகள் பேயாட்டம்போட்ட மாதம் இது. 746பேர் கொல்லப்பட்டார்கள். ஒரேநாளில் 300பேர்வரையில் பலியெடுக்கப் பட்டார்கள்.




☐ செப்டம்பர்:- 200கிராமத்தவர்கள் சுடப்பட்டு.கத்தியால் குத்தப் பட்டு, உடல் துண்டம்துண்டமாக வெட்டுப்பட்டு.பின்பு உடல்கள் எரிக்கப்பட்டு. இப்படியான அநியாயம் இந்த மாதத்திலேயே அரங்கேறியது.

முழு வேகத்தோடு தொடர்கின்ற அராஜகங்கள் முடிவுக்கு வருமா?

# என் வாசகர்களைத் தேடி....

(2)

இந்துமகேஷ் அவர்கட்கு!
பலவருட இடைவெளிக்குப் பிறகு தற்செயலாக தங்களின் "மறுபடியும் நாங்கள்" என்ற பழைய கள் புதிய பாத்திரத்தில் ஊற்றியபடி கிடைக்கப் பெற்றேன்.
இதை வாசித்தபோது வேதனையால் வெம்பினேன்.
சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகவும் அன்றைய காலகட்டத்தைப் படம்பிடித்துக் காட்டுவதற்காகவும் உழைக்க வேண்டிய கலை இலக்கிய வாதிகள் அதற்கு எதிர்த்திசையில் மக்களைத் திசைதிருப்பும் நோக்கோடு குதிரையுமல்லாது கழுதையுமல்லாது கோவேறு கழுதைகளாக நாவல்களை உருவாக்குகிறீர்கள்.
இப்போக்கு தொடருமாயின் சிறிதுகால வரலாற்று ஓட்டத்தில் நீங்கள் மக்கள் விரோத சக்திகளாகி சாக்கடையில் தூக்கி எறியப்படுவது தவிர்க்க முடியாமலே நடந்தேறும்.
உங்கள் எண்ணங்களும் எழுதுகோல்களும் இணைந்துவிடுவதால் எமது மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடுமா?
நீங்களும் எத்தனையோ வருடங்களாகப் பலகதைகளை எழுதியுள்ளீர்... மக்களை ஆராட்டி தாலாட்டி பிற்போக்குச் சகதியில் தூங்கவைத்து நீங்களும் தூங்கியதைவிட வேறு என்ன கண்டிருக்கிறீர்?.... சமுதாயம் புரட்சிகரமாகச் சிந்திக்க ஆரம்பித்துவிட்டால் உங்களைப் போன்ற எழுத்தாளர்கள் ரோட்டில் துண்டுவிரிக்க வேண்டியதுதான் என்பதைத் தெளிவாகக் காட்டிவிட்டீர் போங்கள்....!"

-இந்துமகேஷ் எழுதிய 'மறுபடியும் நாங்கள்' என்னும் குறுநவீனத்தைப் படித்துவிட்டு அவனது வாசகர்களில் ஒருவர் (1986ல்) எழுதிய கடிதத்தில் ஒரு பகுதி இது.
இந்துமகேஷை வம்புக்கிழுத்துச்சாட இந்தக்கடிதமேபோதுமானதாக இருந்தது.
"இதற்கு என்ன பதில்சொல்லப் போகிறாய்?" என்றேன்.
இந்துமகேஷ் சற்று நேரம் மௌனமாக இருந்துவிட்டு ஆரம்பித்தான்.

..............................................................................................................

**இந்துமகேஷ்.**

..............................................................................................................

"ஒரு எழுத்தாளன் இன்னதைத்தான் எழுதவேண்டும் என்று அவனை யாரும் நிர்ப்பந்திப்பதில்லை. அவனது மனஉணர்வுகளுக்கு ஏற்ப, சிந்தனை விருத்திக்கு ஏற்ப அவனால் படைக்கப்படும் ஆக்கங்கள் சமுதாயத்திடம் எடுத்துச் செல்லப்படும்போது சமுதாயத்தால் அங்கீகரிக்கப்படுகிறது அல்லது நிராகரிக்கப்படுகிறது.

ஒருவனது படைப்புக்கள் சமுதாயத்தில் இடம்பிடித்துக்கொள்ளும்போது சமுதாயத்தின் ஒரு பகுதியினர் அவனைச்சுற்றி ஒரு வட்டம் போட்டு விடுகிறார்கள். அந்தவட்டத்துக்குள்நிற்கும்வரையில் அவனுக்கு அந்தக் குறிப்பிட்ட வட்டத்துக்குள் அங்கீகாரம் கிடைக்கிறது. அவனிடமிருந்து பெருமளவில் எதிர்பார்க்கவும்படுகிறது. அந்த எதிர்பார்ப்பில் ஒரு தளர்வுநிலை தோன்றும்போது அல்லது அப்படித் தோன்றுவதாய் தோற்றம் அளிக்கும்போது அவனில் தங்களுக்கேற்ற மாற்றத்தைக் கொணர அவனது அபிமானிகள் முயல்கின்றார்கள். அதை ஏற்றுக் கொள்ளாதபட்சத்தில் அந்தப்படைப்பாளி அவர்களிலிருந்து அந்நியப்பட நேர்கிறது.

நியூவேவ் என்கின்ற புதிய அலை எழுத்துலகில் மிகவேகமாகப் பரவிக்கொண்டிருந்த 70களில் "ஒரு விலைமகளைக் காதலித்தேன்" என்னும் நவீனத்தின் மூலம் வீரகேசரி, மித்திரன் வாசகர்களிடையே நான் அறிமுகமாகியபோது, இந்துமகேஷ் என்ற எனது புனைபெயருக்கு முன்னால் "நியூவேவ் எழுத்தாளர்" என்று அடைமொழியிட்டு என்னை அறிமுகப்படுத்திற்று வீரகேசரி. வீரகேசரிப்பிரசுரமாக வெளிவந்த எனது மூன்றாவது நவீனமாகிய "இங்கேயும் மனிதர்கள்" நவீனத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் "சமுதாயத்தின் பளபளப்பான பகுதிகளைமட்டுமின்றி இருண்டு கிடக்கும் பகுதிகளிலும் தனது தீட்சண்யமான பார்வையைச் செலுத்தி அதில்வாழும் கூட்டத்தினை தனது காவிய நாயகர் நாயகிகளாக்கும் எழுத்தாளர்களில் இந்துமகேஷ் முதன்மையானவர்!" என்று குறிப்பிட்டது வீரகேசரி.

எப்போதும் மனிதமன உணர்வுகளை மென்மையாகத் தொட்டுச் செல்லவே நான் விரும்பி வந்திருக்கிறேன். எங்கேயும் எப்போதும் மனிதத்தைத்தேடியே பழக்கப்பட்டிருக்கிறேன். இன, மத, மொழி,வர்க்க, முரண்பாடுகளைக் கடந்து என்றும் நிலைத்திருக்கக் கூடியதான மனிதம் அடிப்படையில் எல்லா மனிதர்களிடத்தும் உள்ளடங்கிக் கிடப்பதாகவே நான் கருதுகிறேன்.

என் ஆரம்பகால நவீனங்கள் வயது வந்தவர்கள்மட்டுமே வாசிக்கத் தக்கவை என்னும் ஒரு கருத்தும் ஒரு சில வாசகர்களிடையே அப்போது நிலவிற்று. "நவீனங்களை வாசிக்கும் வயது"வந்தவர்கள் ஆவலாய் வாசிக்கத்தக்கநவீனங்களாகவே அவை அப்போது இருந்தன என்பதனால்தான் அவைகள் வாசகரிடையே பெரும் வரவேற்புப் பெற்றிருந்தன. வீரகேசரிப்பிரசுரமாக வெளிவந்த எனது முதல் நாவலான "ஒரு விலைமகளைக் காதலித்தேன்" இந்துமகேஷை வாசகரிடையே பேசவைத்தது. இன்னும் அந்த நவீனத்தைப் பாராட்டும் வாசகர்களை நான் சந்திக்கிறேன்.

நல்லகருத்துக்களை இலக்கியமாக்கி வாசகர்களிடையே நடமாட விடுவதில் ஒரு படைப்பாளிக்கு திறமையுடன் கொஞ்சம் துணிச்சலும் தேவைப்படுகிறது. வாழ்வோடு இணைந்துவிட்ட சில விஷயங்களைத் தொடமறுப்பதால் தங்களைத் தூய்மையானவர்களாகக் காட்டிக் கொள்ள முனைகிற எந்தப் படைப்பாளியும் மனிதத்திலிருந்து விலகிப் போவதாகவே நான எண்ணுகிறேன். இப்படி நான் எழுதுவது விரசங்களுக்கோ, நச்சுப் படைப்புக்களுக்கோ வக்காலத்து வாங்குவதாகாது. விரசங்களும் அவற்றின்வழி பிறக்கின்ற நச்சுப் படைப்புக்களும் இலக்கியமாகிவிடுவதுமில்லை.

ஜெர்மனியில் "மௌனத்தில் அழுகின்ற மனங்களை"த் தொடர்ந்து, "விடியலுக்கில்லைதூரம்", "நீலவிழிப்பாவைகள்", "மறுபடியும் நாங்கள்" என்று சில குறுநவீனங்களை நான் 80களில் எழுதி வெளியிட்டேன். இந்த வரிசையில் கடைசியாக எழுதப்பட்ட நவீனம்தான் "மறுபடியும் நாங்கள்". நமது தாயகச் சூழ்நிலைகளை வைத்து நான்எழுதிய அந்த நாவலைப் பாராட்டியும் வரவேற்றும் நூற்றுக்கணக்கான கடிதங்கள் வந்திருக்கின்றன. அவைகளுக்கிடையே இந்துமகேஷைச் சாடமுயலும் கடிதங்களும் ஒன்றிரண்டு.

மண்ணின் மணம்கமழ நாம் ஒரு நவீனத்தைப் படைக்கும்போது இன்றுள்ள சூழ்நிலைக்குஅப்பாற்பட்டஉணர்வுகளோடு பாத்திரங்களைப் படைத்துவிட முடியாது. பொதுவாக எனது கதைகளின் பாத்திரங்கள் சிலவேளை எனது சொற்களுக்குள் கட்டுப்பட்டு நிற்காமல் தங்கள் உணர்வுகளுக்கேற்ப நடந்துகொள்வதுமுண்டு.

என் பாத்திரங்களைப்போலவே அவைகளைப் பேசுகின்ற என் வாசகர்களும். அனேகமான என்வாசகர்கள் என்னோடு நின்று என் பாத்திரங்களைப் புரிந்துகொள்கிறார்கள். ஒருசிலர்மட்டும் தங்கள் கருத்துக்களுக்கு என் பாத்திரங்கள் ஒத்துவர மறுப்பதால்

அந்தப் பாத்திரங்களையும் அந்தப் பாத்திரங்களை உருவாக்கிய என்னையும் வெறுக்க முனைகின்றார்கள். "மறுபடியும் நாங்கள்" நவீனத்தில் வருகின்ற பாத்திரங்கள் சில நிகழ்கால அரசியல் அவலங்களோடு சிக்குண்டு போய்விடுகிறார்கள். அதை மேற்குறிப்பிட்ட என் வாசகரால் ஒத்துக்கொள்ள இயலவில்லை. என்மீது அவருக்கு ஏகப்பட்ட கோபம். ஆயினும் கடிதத்தை முடிக்கும்போது அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"....இந்தக்கடிதத்தை உங்கள் வாசகரின் கடிதமாக ஏற்று எனது விமர்சனத்தில் ஏதேனும் குற்றமிருப்பின் அதையும் குறிப்பிட்டு பதில் வரைவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்."

இந்தவரிகளே அவர் என்னை எந்தஅளவுக்குப் புரிந்துகொண்டிருக்கிறார் என்பதற்குச் சாட்சியங்களாகிவிடுகின்றன.

அவர் என்னிடம் கோரியிருந்த முக்கியமான விஷயம்:

'சமுதாயத்தின் முன்னேற்றத்துக்காக கலை இலக்கிய வாதிகள் உழைக்கவேண்டும் என்பதும், வாழ்கின்ற காலத்தைப் படம்பிடித்துக் காட்ட வேண்டும் என்பதும்'.

-நியாயமான கோரிக்கைதானே? இதில் நான் கோபப்பட ஏதுமில்லையே?

-இந்துமகேஷ் சொல்லி நிறுத்தினான்.
"அப்படியானால் வாசகர்களுக்கேற்ப உன் கருத்துக்களையும் மாற்றிக் கொள்வாயா?" என்றேன் நான் குத்தலாக.
இந்துமகேஷ் புன்னகைத்தான்.
"எழுதுவது என் உரிமை. விமர்சிப்பது, ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது என் வாசகர்களின் உரிமை"என்றான்.
எனது கையில் இன்னுமொரு கடிதம் சிக்கிக்கொண்டது.
மேலைநாடுகளிலுள்ள தமிழ்வாசகர்களைப்பற்றி ஒருவாசகர் இந்துமகேஷுக்கு எழுதியிருந்த கடிதம் அது.
அந்தக்கடிதமும் அதற்கு இந்துமகேஷ் சொன்ன பதிலும்-
அடுத்த இதழில்-

(தொடரும்)

(பூவரசு ஆடி-ஆவணி 1992 இதழில் வெளியானது)

---


பூவரசு
இனிய தமிழ் ஏட்டுடன்

எங்கள்

# இளந்தளிர்கள்.

இளையோர்க்கான பிரத்தியேகஇணைப்பு
ஒவ்வொரு பூவரசு இதழுடனும்!

உங்கள் மழலைகள் எழுத, வாசிக்க, சித்திரம்வரைய
போட்டிகளில் பங்குகொள்ள உற்சாகமூட்டுங்கள்!

நாம்வாழத் தமிழ்வாழும்
தமிழ்வாழ நாம்வாழ்வோம்!

நெடுங்கதை.

# சிலருக்கு சிலது.

(தொடர்ச்சி)

"அப்பாவின்ரை வேலை இடத்து நம்பரைத் தாறன் கதைச்சுப்பார்."
"சொல்லு!"
புவனராணி தொலைபேசியை வைத்ததும் அம்மா அவசரமாக வந்தாள்.
"ஆரடி போன் எடுத்தது?"
"புவனராணி!"
"என்னவாம்?"
"அப்பாவோடை ஏதோ அவசரமாய்க் கதைக்கவேணுமாம்."
"அவரோடை என்ன கதைக்கவேணுமாம் இவள்?" என்று சற்றுச் சினத்துடன் கேட்ட அம்மாவை ஆச்சரியமாகப் பார்த்தாள் அருந்ததி.
"அவரோடை கதைக்கிறதை என்னட்டையும் சொல்லலாம்தானை?"
அருந்ததிக்குச் சிரிப்புவந்தது.
"அம்மா..! புவனராணிக்கு என்ன பிரச்சினையோ...அப்பாவிட்டை ஏதாவது உதவிகேட்க எடுத்திருப்பா... அப்பாவோடை கதைக்கிறதை எங்களிட்டைச் சொல்லு எண்டு கேட்கிறது நல்லதே... அவ சொன்னாலும் எங்களாலை தீர்க்க முடியாத பிரச்சினையாக்கூட இருக்கலாம்தானை!"
"உனக்கு உலகம் விளங்காது விடு!" என்று சலித்துக்கொண்டே மறுபடி தன்னுடைய அறைக்குப் போனாள் அம்மா.

---

-இந்துமகேஷ்.

துயில்வரும்நேரம் இருமல் பொறாது
தொண்டையும் நெஞ்சும்உ லர்ந்து வரண்டு
துகிலும் இழந்து சுணையும்அழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு

கலியுகம் மீதில் இவர் மரியாதை
கண்டிடும் என்பவர் சஞ்சலம் மிஞ்ச
கலகல என்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து

தெளிவும்இராமல் உரைதடுமாறி
சிந்தையும் நெஞ்சமு லைந்து மருண்டு
திடமும்அலைந்து மிகவும்அலைந்து
தேறிநல்லாதரவு ஏதுஎன நொந்து

மறையவன்வேதன் எழுதியவாறு
வந்ததுகண்டமும் என்று தெளிந்து
இனியென கண்டம் இனியென நொந்தப்
மேதினிவாழ்வுநி லாதினிநின்ற

கடன்முறைபேசும் எனவுரை நா
றங்கிவிழுந்துகை கொண்டுமொழிந்து
கடைவழிகஞ்சி ஒழுகிடவந்து
பூதமுநாலுசு வாசமும் நின்று

வீடு — 3

"பாவம்....புவனராணி. இந்தச் சின்னவயசிலை அவளுக்கு இப்பிடியொருவிதி!"
"ஆராருக்கு என்ன நடக்கவேணுமோ அதுதானை நடக்கும்!"
"என்டாலும்.பாவம்....அவள் எப்பிடித்தான் தாங்கிக்கொள்ளப் போறாளோ...!"
"சொந்தபந்தமெண்டும் ஆரும் இல்லை... சரி... ஒரு பிள்ளையாவது பிறந்திருந்தால் அதை நினைச்சாவது ஆறுதல் அடைஞ்சிருப்பாள்...!"
"ம்...நாங்கள் பாவம் பாத்தென்ன...செத்தவன் செத்ததுதான்...!"
— புவனராணியின் அயலில் இருந்தவர்களுக்கு இப்போது அவளில் அனுதாபம் பிறந்திருந்தது...
பரஞ்சோதியின் கதை , இப்படிப் பாதியில் முடியுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லைத்தான்.
மரணம் யாருக்கும் திகதி குறித்துவிட்டு வருவதில்லை.

எந்தநிலையில் இருந்தாலும் எப்படி இருந்தாலும் காலம் தன் கணக்கை மாற்றி எழுதுவதில்லை.
பரஞ்சோதியின் விடயத்திலும் அதுதான் நடந்தது.
நேற்றுமாலை நெஞ்சுவலி என்று வந்து படுத்தவன் இரவு அம்புலன்ஸ் வந்து ஏற்றியபோது உயிர் பிரிந்திருந்தது.
எல்லாரையும்விட அதிகமாய்த் துடித்துப் போனவர் சண்முகம்தான்.
பரஞ்சோதிக்கும் அவருக்கும் இடையில் பதினைந்துவருடப் பாசம். அவர் ஜெர்மனிக்கு வந்தபுதிதில் அகதிக்காம்பில் பதினெட்டு வயதுப் பையனாக அவனைக் கண்டார் அவர்.
அது என்னவோ இவர்மீதும் அவனுக்கு அப்படியொரு பிடித்தம்.
"அண்ணை அண்ணை!" என்று இவரையே சுற்றிச்சுற்றி வருவான்.
சில காலங்களுக்கு இவர் வீட்டிலேயே அவனும்தங்கியிருந்தான்.
விசாப் பிரச்ச னைகள் தீர்ந்து வேலையும் கிடைத்தபிறகு தனியாக வீடு எடுத்துக்கொண்டு போய்விட்டான். ஆனாலும் சண்முகத்தின்மீது அவனுக்குள்ள அன்பு குறைந்ததாகக் கொள்ளமுடியாது.
அவனுக்கும் புவனராணிக்கும் திருமணம் நடந்தபோது அவனது தந்தையின் இடத்திலிருந்து திருமணப்பதிவுக்கு சாட்சிக் கையெழுத்துப் போட்டவரும் சண்முகம்தான்.
தான் முன்னின்று நடத்திய திருமணம் இப்படி அரைகுறையாக முற்றுப் பெற்றுவிட்டதில் சண்முகத்துக்கு தாளாத வேதனை.
பரஞ்சோதியின் மறைவிலும் மேலாக புவனராணியின் நிலையே அவரை இன்னும் பாதித்தது. அவளுக்கென்று இங்கு உற்றார் உறவினர் யாருமில்லை.
பழகியவர்களிலும் உண்மையான பாசத்தோடு அவளிடம் பழகியவர்கள் மிகக் குறைவாகவே இருந்தார்கள். மற்றவர்களுடன் அதிகம் பழக்கம் வைத்துக் கொள்ள விரும்பாத பரஞ்சோதியின் போக்கும் அதற்கொரு காரணமாக இருந்தது.
இனி....?

என்னதான் வெளிநாட்டு வாழ்க்கையில் மற்றவர்களைப்பற்றி அக்கறைப் படாமல் தாங்களும் தங்கள்பாடும் என்று வெள்ளைக்காரன்மாதிரி வாழ்ந்து விடலாம் என்று வாழமுனைந்தாலும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் இனசனம் என்று தேடி ஓடவைத்துவிடுகிறது காலம்.
அதிலும் தனிமைவாழ்வில் வெள்ளைக்காரன்மாதிரி வாழ்வது அத்தனை சாத்தியமான காரியமல்ல என்பது அப்படி வாழ்ந்து அனுபவப் பட்டவர்களுக்குத்தான் புரியும்.
தாங்களும் தங்கள்பாடும் என்று ஆரம்பித்து தங்கள்குடும்பப் பிரச்சினைகளில் இருந்து மீளமுடியாமல் மற்றவர்களோடும் பகிர்ந்துகொள்ளமுடியாமல் மனம் புழுங்கி மனநோய் வைத்தியசாலையைத் தஞ்சம் புகுந்தவர்கள் பலரை சண்முகம் அறிந்திருந்தார்.

(தொடர்ச்சி 33 ம் பக்கம்)



## அன்புள்ள தம்பிக்கு!

எனது முன்னைய கடிதம் பல புதிய தகவல்களைத் தந்ததாக எழுதியிருந்தாய்.

பத்திரிகைகளில் வெளிவராத சில தகவல்களும் அதிலிருந்து அறிந்து கொண்டதாகக் குறிப்பிட்டிருந்தாய்.

சிலசந்தர்ப்பங்களில் என்று சொல்வதை விட பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மட்டுப்படுத்தப்பட்ட செய்திகளே பத்திரிகைகளில் வெளிவரும். அதற்கும் பல காரணங்கள் இருக்கக்கூடும்.

ஆனால் கடிதங்களில் அவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட தகவல்களை குறிப்பிட முடியாது. இதனால்தான் சில தலைவர்கள் எழுதிய கடிதங்கள் மிகவும் புகழ்பெற்றுள்ளன.

புதினங்களை அறிய உங்கள் கடிதத்தை எதிர்பார்த்திருப்பேன் என்று எழுதியிருந்தாய். புதினங்கள் என்பதைவிட எமது தாயகத்தின் உண்மை நிலையை தெளிவுபடுத்துவதே எனது கடிதத்தின் நோக்கம்.

கடிதத்தை எழுதத் தொடங்கும்போதே கொழும்பு பண்டாரநாயக்கா மண்டபத்தில் நடிகர்திலகம்சிவாஜிகணேசனுக்கு முடிசூட்டுவிழா நடைபெற்ற தகவல்வந்தது.

அவருக்கு முடிசூட்டுவிழா நடைபெற்றுக்கொண்டிருந்தபோது கொழும்பு கொட்டாஞ்சேனைப் பகுதியில் முந்நூறுக்கும் அதிகமான தமிழர்கள் கைது செய்யப்பட்டு எங்கோ கொண்டு செல்லப்பட்டார்கள்.

ஒரு தமிழனுக்கு முடிசூட்டிவிட்டு எத்தனையோ தமிழர்களின் தலைகளுக்கு உலைவைக்கும் சிறிலங்கா அரசின் நடிப்புத்திறன் நடிகர் திலகத்தையே மிஞ்சிவிட்டது பார்த்தாயா?

தமிழர்கள் கொழும்பு சித்திரவதைமுகாம்களில் தலைகீழாகத் தொங்க விடப்பட்டு தாக்கப்பட்டுக்கொண்டிருக்கையில் நடிகர்திலகம் சிவாஜி கணேசனுக்கு ஒரு முடிசூட்டுவிழா அவசியம்தானா என்பதை நீ சற்று யோசித்துப்பார்.

தமிழனின் தலையில்சூட்டுவதற்கு தமிழனையே பயன்படுத்துகிறார்கள்.

தமிழினம் விடுதலைபெறும் காலகட்டம் இது. எனவே தமிழர்கள் விடுதலைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்என்பதை நான் கூறித்தான் நீ தெரிந்துகொள்ளவேண்டும் என்பதில்லை.

தமிழீழ மூன்றாம்கட்டப்போரில் தமிழர்கள் எதிர்பாரா வெற்றியினைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதனைமூடிமறைக்க கொழும்பில் ஒரு சதிக்குண்டு வெடித்தது. தொடர்ந்து கொழும்பில் தமிழர்கள் கைதுசெய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டு வருகின்றார்கள். தமிழீழ விடுதலைக்காய் தம்மையே அர்ப்பணிக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை தமது சுயநலத்துக்காக அமெரிக்கா பயங்கரவாதிகள் என்ற சாயத்தை பூசியுள்ளது. அந்தச்சாயம் காய்வதற்குள் அமெரிக்க இராணுவப் பயிற்சியாளர்கள் சிறிலங்காவுக்கு அனுப்பப்பட்டார்கள்.

இப்படி தொடர்ச்சியாகப்பல சம்பவங்கள் நடைபெற்று முடிந்துள்ளன.

தொடர்ந்தும் நடந்துகொண்டிருக்கின்றன.

இக்கடிதத்தை எழுதிக்கொண்டிருக்கும்போது சிறிலங்கா பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை தெரிவித்த சில தகவல்கள் என் காதுகளுக்கு எட்டியது.

"அமெரிக்க இராணுவப் பயிற்சியாளர்கள் எமது இராணுவத்திற்கு பயிற்சி ஆலோசனைகளை மாத்திரமே வழங்கினார்கள். ஆனால் அமெரிக்க இராணுவத்திற்கு ஆலோசனைவழங்க என்னால் முடியும்!' என்று ரத்வத்தை உளறுகிறார்.

கேட்டாயா இப் புதுக்கதையை!

அமெரிக்க இராணுவப்பயிற்சியாளர்கள் வெளியேறப் போகின்றார்கள் என்றதும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இதனைத்தெரிவித்துள்ளார்.

அமெரிக்க இராணுவத்திற்கே இராணுவப் பயிற்சியளிக்க முடியுமா இவரால்?

இந்த ரத்வத்தையின் தவறான நடவடிக்கையினால் இன்று சிறிலங்கா மீளமுடியாத பிரச்சினைக்குள் சிக்கிக்கொண்டுள்ளது.

வன்னியில் சிறிலங்காஅரசு தமது முழுப்பலத்தையும் பிரயோகித்து மாபெரும் யுத்தமொன்றை நடாத்தியது. பல நவீன ஆயுதங்களை அவர்கள் பிரயோகித்ததையும் நீ கேள்விப்பட்டிருப்பாய்.

யுத்ததந்திரங்களில் புலிகள் வல்லவர்கள் எனப்பெயரெடுத்தவர்கள். ஒவ்வொரு தாக்குதலிலும் வித்தியாசமான நடைமுறைகளைக் கடைப்பிடிக்கின்றார்கள்.

மாங்குளத்தை பிடிக்கும் நோக்கத்துடன் சிறிலங்கா இராணுவம் இருபுறமிருந்தும் வேகமாக நகர்ந்து விடுதலைப் புலிகளின்பொறிக்குள் சிக்கிக்கொண்டனர்.

படையினரை மத்தியில்விட்டு சுற்றிநின்று புலிகள் தாக்கினார்கள். நவீனரக ஆயுதங்களை மாத்திரமல்ல 34 வாகனங்களையும் புலிகள் வசம் சேர்ப்பித்த தாக்குதல் இது.

இராணுவத்தினர் ஆயுதங்களையும் வாகனங்களையும் போட்டுவிட்டு ஓடித் தப்பினர்.இத்தாக்குதலில் புலிகளின்யுத்ததந்திரம் உலகப்புகழ் பெற்றுவிட்டது. முல்லைத்தீவு தாக்குதலையும் விஞ்சிய திறமை இங்கு வெளிப்பட்டதாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அப்படிஎன்ன யுத்த தந்திரம் என்று கேட்கின்றாயா?

எதற்கும் தயாரான நிலையில் வரும் இராணுவத்தினரை எந்தத்தடையும் இன்றி உள்ளேவரவிட்டு சுற்றி வளைத்துத் தாக்குவதுததான் அந்தத் தந்திரம். இதற்கு முன்பு மிகச்சிறிய அளவில் இவ்வாறான தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன.ஆனால் மிகப்பெரியஇராணுவத்தை நவீன ஆயுதங்களுடன் எதிர்கொண்ட தாக்குதல் இது! சிறிலங்கா அரசு இந்தத் தோல்வியை மறைக்க கொழும்பு உலக வர்த்தகச்சந்தைக் கட்டிடத்திற்கு எதிரே குண்டொன்றை வெடிக்க வைத்தது. அனைவரின் கவனமும் அந்தப்பக்கம் திரும்பியது. ஏற்கனவே திட்டமிட்டு இருந்ததைப்போல, அரசின் தகவல் தொடர்பு சாதனங்களும் "புலிகள் தாக்கினார்கள்புலிகள் தாக்கினார்கள்!" என உளறத்தொடங்கினார்கள்.

ஒன்றுக்கொன்று முரணானதகவல்களை அரசுவெளியிட்டுக்கொண்டிருந்தது. ஆனால் விடுதலைப்புலிகள் தமக்கும் இதற்கும் எவ்விதத்தொடர்பும் இல்லையென்று அழுத்தம் திருத்தமாகக் கூறினார்கள்.

இந்தச் சதிக்குண்டு வெடிப்பில் பதினெட்டு அப்பாவிகள் பலியானார்கள். அரசுக்கு எவ்வித பாதகமும் ஏற்படவில்லை.தொடர்ந்தும் கொழும்பில் தமிழர்கள் சுற்றிவளைத்துப்பிடிக்கப்பட்டார்கள்.அவர்களில் பலர் சித்திரவதை முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு கடுமையான சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர்.

"விடுதலைப் புலிகளைப் பிடித்துவிட்டோம்.அவர்கள்ஏராளமான தகவல்களை வெளியிட்டார்கள்!" என்று பொய்யான தகவல்களை அரசு வெளியிட்டது. கொழும்பில் பரவலாகவாழும் தமிழர்களை சுற்றிவளைத்துப்பிடிக்க இதனை ஒரு சந்தர்ப்பமாக அரசு பயன்படுத்திக்கொண்டுள்ளது.

இனிமேல் இதுபோன்ற குண்டு வெடிப்புக்கள் நடைபெறமாட்டாது என அரசு உத்தரவாதம் அளித்த அடுத்தநாள் களனியிலுள்ள மின்தொடர்பு நிலையத்தில் குண்டுவெடிப்பொன்று ஏற்பட்டுள்ளது. இதனால் அரசுக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ளது.

*சிறிலங்காவின் சந்திரிகாஅரசு இராணுவநடவடிக்கையில் முழுக்கவனத்தையும் செலுத்தியதனால்தான் நாட்டில் இன்று அமைதியின்மை ஏற்பட்டுள்ளது என்பதை நீயும் நானும் அறிவோம். இன்று சிறிலங்காவில் மக்களாட்சி நடைபெறவில்லை இராணுவ ஆட்சிதான் நடைபெறுகின்றது.*
*சந்திரிகா அரசின் பிடிவாதத்தினால் இராணுவம் மிகப்பெரும் படையுடன் வுவுனியாவிலிருந்து நகர ஆரம்பித்துள்ளது.*
*30ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் நவீன ஆயுதங்களும் கொண்ட இந்தப்படை வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்கு நிச்சயம் பாதையை ஏற்படுத்தும் என சிறிலங்கா அரசு நம்புகின்றது. ஆனால் இது ஒரு ஆபத்தான போர் என இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.*
*ஆனாலும் எமது தர்மப்போர் எமது வீரமறவர்களுக்கு வலிமையைக் கொடுக்கும். நீ அடிக்கடி கூறுவதைப்போன்று வெற்றி நமதே!*
*மீண்டும் அடுத்த கடிதத்தில் சந்திக்கும்வரை...*

*அன்புடன்*
*அண்ணன்*
*வீ.ஆர்.வரதராஜா.*

---

**தற்காலத் தமிழ்ச் சிறுகதைகளை ஃப்ரெஞ்சுக்கு மொழிபெயர்த்துள்ளீர்கள். அவை உலகத் தரத்துக்கு உள்ளனவா?**

தற்கால இலக்கியத்தின்மீதான எனது ஈடுபாடுமொழி சார்ந்தது. இங்கு பல்வேறுபிரதிகளை மானுடவியல் நோக்கில் அணுகமுடியும். தற்கால வாழ்க்கை நிலைகளைக் கூறுவனவாக, அறிமுகப் படுத்துபவையாக அவை இருக்கின்றன. தமிழ் வாழ்க்கையை மானுடவியல்ரீதியில் அணுகுவதற்கான மிகச்சிறந்தவழியாக எனக்கு அது தோன்றுகின்றது.

ஆனால் இலக்கியமென்றுபார்த்தால் பிரச்சினை சிக்கலாகிவிடுகிறது. உலக அளவில் அறியப்படவேண்டுமெனில் மொழிபெயர்ப்புக்கள் செய்யப்படவேண்டும். மற்றமொழிகளுக்கு இருப்பதுபோன்று தமிழுக்கு வாதிடுபவர்கள், ஆதரவு (Lobby) தேடுபவர்கள் இல்லை. அதுபோலவே சந்தர்ப்பங்களும் வாய்ப்புக்களும் குறைவாகவே உள்ளன.

**ஃப்ரான்ஸீவா குரோவுடன்** ஓர் நேர்காணல்:ரவிக்குமார்
**தினமணி பொங்கல்மலர். 1997**
**நன்றி:தாமரை,தமிழகம்.**

(28ம்பக்கத்தொடர்ச்சி-சிலருக்கு சிலது.)

அப்படி ஒரு நிலை புவனராணிக்கு ஏற்பட்டுவிட்டால்....
அச்சம் அவருள் குடிகொண்டது.
வீட்டிலும் வேலைத்தலத்திலும் புவனராணியின் நினைவும் நிலையும் அவரது மனத்தை முற்று முழுதாய் ஆக்கிரமித்துக்கொண்டிருந்தது.
அவளுக்கு ஏதாவது வழிசெய்தாகவேண்டும்.
முன்பொருநாள் பரஞ்சோதி அவரிடம் கேட்டது சட்டென்று ஞாபகத்துக்கு வந்தது.
"அண்ணை...சாவைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீங்கள்?"
"என்னடாப்பா...திடீரெண்டு! வாழும்வளரும் பிள்ளையள் சாவைப்பற்றி இப்ப நினைக்கப்படாது!"
"ஆனால் பிறந்தவை எல்லாரும் சாவைத் தங்களோடை கொண்டுதானை திரியனம்!"
"மெய்தான். அதுக்காக அதைப்பற்றியே நினைச்சக் கொண்டிருக்கவேணுமெண்டில்லையே"
"அதுக்கில்லை அண்ணை நான் கேட்டது.... சாவுக்குப் பின்னாலை என்ன இருக்கும் எண்டு நீங்கள் நினைக்கிறீங்கள்?"
"வாழ்க்கைதான்!"
"என்னண்ணை...செத்தவன் எப்பிடி வாழ்கிறது?"
"இப்ப நாங்கள் ஆர்? முந்தி வாழ்ந்தவங்களின்ரை ஒரு பகுதி. என்ன? இனிவாற சந்ததி எங்களின்ரை பகுதி...இப்ப உதாரணத்துக்கு நீ உன்ரை தாய் தகப்பன்ரை எச்சம். உன்ரை பிள்ளையள் உன்ரை வாழ்க்கையின்ரை எச்சம்...இப்ப உன்னிலை உன்ரை தாய்தகப்பன்ரை ரெத்தம் ஓடுறதுமாதிரி... உன்ரை பிள்ளையளிலை உன்ரைரெத்தம் ஓடும். என்ன...அப்ப நீ செத்தாலும் உன்ரை பிள்ளையளின்ரை உருவத்திலை நீவாழ்கிறதாத்தானே அர்த்தம்...!"
"சும்மா போட்டுக் குழப்பிறியள்!" என்று சிரித்தான் பரஞ்சோதி.
ஆனாலும் அவனது கண்களில் ஒருகலக்கம் தெரிந்ததை அவதானித்தார் அவர்.
"என்னடாப்பா....நீ எதையோ நினைச்சுக் குழம்பிறை...என்ன சங்கதி...? என்னட்டைச் சொல்லுறதாயிருந்தால் சொல்லு!"
"உங்களுக்குச் சொல்லாமல் வேறை ஆரட்டை அண்ணை சொல்லுவன்... என்ரை வாழ்க்கை என்னோடை முடிஞ்சிடும்போலக்கிடக்குது!...என்னதான் உழைச்சென்ன...பேர் சொல்ல ஒரு பிள்ளை பிறக்காமல்..."
சண்முகம் சிரித்தார்.
"இதுக்கேனடாப்பா இவ்வளவு கவலைப்படுகிறை... இப்ப ஏன் அவசரப்படுகிறை.... கொஞ்சம் பொறுத்துப் பிறக்கட்டுமன்"
"கலியாணம்கட்டி அஞ்சுவருசம் ஆச்சுது அண்ணை... அதைவிட இன்னொரு விசயம்.... இனி எனக்குப் பிள்ளை பிறக்க சந்தர்ப்பமே இல்லையெண்டு டொக்டர் சொல்லிப்போட்டார்!"
அதைச்சொன்னபோது அவனது கண்கள் கலங்கியிருந்தன.
தலையைக் குனிந்துகொண்டான்.

அவனுக்கு ஆறுதல்சொல்ல வழிதெரியாமல் வானத்தைப் பார்த்தார் சண்முகம்.

"நான் எனக்காகக் கவலைப்படேல்லை அண்ணை... பாவம் இவள் புவனா!"

"சரி... இதையே நினைச்சுக்கவலைப்படாதை...வாழ்க்கையிலை எவ்வளவோ காரியங்கள் இருக்கு....! சில துன்பங்கள் வாறபோது அதுக்கு மாற்று வழியாகவும் சில காரியங்களை நாங்கள் செய்யலாம்.. நான் என்ரை மனிசி என்ரை பிள்ளையள் எண்டு ஒரு குறுகின வட்டத்துக்குள்ளை நிக்காமல் என்ரை இனம் என்ரை சனம் எண்டு கொஞ்சம் பார்வையை விரிச்சுப்பார். உனக்கு ஒரு பிள்ளை பிறக்கேல்லையே எண்டு கவலைப்படுகிறபோது எங்கடை நாட்டிலை எத்தினையோ பிள்ளையள் தாய்தகப்பனை இழந்து நிக்குதுகளே...அதைக்கொஞ்சம் நினைச்சுப்பார்... அந்தப் பிள்ளையளுக்கு ஏதாவது செய்ய முடிஞ்சால் அது எத்தனை பெரிய புண்ணியம்!"

சண்முகம் அதைச் சொல்லி முடித்துவிட்டு அவனைப் பார்த்தபோது அவன் தன்கண்களைத் துடைத்துக்கொண்டான்.

அவன் முகத்தில் ஒரு தெளிவு பிறந்தாற்போல் தோன்றிற்று.

அடுத்தடுத்த மாதங்களில் அவன் தன் போக்கை மாற்றிக்கொள்ளத் தொடங்கியிருந்தான்என்பதைப் புவனராணியின் கதைகளிலிருந்து ஊகித்துக் கொண்டார் சண்முகம்.

ஆனால் காலம் அவனை இப்படி அற்பாயுளில் கவர்ந்துகொண்டு போகுமென்று யார் எதிர்பார்த்தார்கள்?



வீடு- 4

வளர்பிறைபோல எயிறும் உரோம
மும்சடையும் சிறு குஞ்சியும் விஞ்ச
மனதும் இருண்ட வடிவும்இலங்க
மாமலைபோல்யம தூதர்கள் வந்து

வலைகொடுவீசி யுயிர்கொடுபோக
மைந்தரும் வந்து குனிந்தழநொந்து
மடியில்விழுந்து மனைவி புலம்ப
மாழ்கினரேயிவர் காலம் அறிந்து

பழையவர் காணும் எனும்அயலார்கள்
பஞ்சுபறந்திட நின்றவர்பந்தர்
இடுமெனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியும்என்று

பலரையும்ஏவி முதியவர்தாம்
இருந்தசலம்கழு வுஞ்சிலர்என்று
பணிதுகில் தொங்கல் களபம்அணிந்து
பாவகமே செய்து நாறும் உடம்பை

வரிசைகெடாமல் எடும்எனவோடி
வந்துஇளமைந்தர் குனிந்துசுமந்து
கடுகிநடந்து சுடலையடைந்து
மானிடவாழ்வென வாழ்வென நொந்து

விறகிடைமூடி அழல்கொடுபோட
வெந்துவிழுந்து முறிந்துநிணங்கள்
உருகியெலும்பு கருகியடங்கி
ஓர்பிடிநீறும்இ லாதஉடம்பை
நம்பும் அடியேனை யினியாளுமே.
(பட்டினத்தார் பாடல்)

அருந்ததிக்கு அதிர்ச்சியாக இருந்தது.
இப்படியொரு நிலை ஏற்படும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.
அப்பாவுக்கும் அம்மாவுக்கும் அடிக்கடி வாக்குவாதம் ஏற்படுவதும் அது ஒரு சின்னச்சண்டையாக உருப்பெறுவதும் யாராவது ஒருவர் அதில் விட்டுக்கொடுத்து மீண்டும் அமைதி நிலைக்குத் திரும்புவதும்...
எல்லாம் சாதாரணம்தான்.
ஆனால் இப்போது...
ஒரு சிறு விவாதம் பெரும்புயலாக மாறி அப்பா என்ற ஆலமரத்தையே அடியோடு சாய்க்கிறமாதிரி...

அப்பா கோபித்துககொண்டு வீட்டைவிட்டே வெளியேறிவிட்டார்.
இரண்டுநாட்களாக அவர் வீட்டுப்பக்கமே வரவில்லை. வேலைத் தலத்திலும் இல்லை.
வேறு எங்கே போயிருப்பார் என்பது புதிர்.
"எங்கைபோவார்...அந்தப் புவனராணி வீட்டைதான்!" என்ற அம்மாவை ஆச்சரியமாகப் பார்த்தாள் அருந்ததி.
"சீ...இப்பிடியெல்லாம் கதைக்காதீங்கோ அம்மா...இது பாவம்!"
"எதடி பாவம்..? வயசுபோகப்போக மனிசருக்குப் புத்தி மாறும் எண்டது இப்பதான் எனக்கு விளங்குது...கொப்பனுக்குப் புத்தி மளுங்கிட்டுது!...."
அம்மாவின் நிலையைப்பார்க்க அம்மாவுக்குத்தான் இப்போது புத்தி மழுங்கிவிட்டது என்று தோன்றிற்று அருந்ததிக்கு.
"நீங்கள் ரெண்டுபேரும் இப்பிடி மாறிமாறிச் சண்டைபிடிச்சுக் கொண்டிருந்தால் பழுதாப்போறது உங்கடைவாழ்க்கை இல்லை அம்மா... என்ரை வாழ்க்கைதான். ஒரேஒருபிள்ளை எண்டு இருக்கிற என்னைப்பற்றிக் கொஞ்சமாவது யோசிக்கிறீங்களா நீங்க?நீங்கள் என்ன சொன்னாலும் சகிச்சுக் கொண்டிருக்கிறஅப்பா இப்ப ரெண்டுநாளா வீட்டையேவராமல் இருக்கிறோர் எண்டால்...அவரின்ரை மனம் எவ்வளவு புண்பட்டுப் போயிருக்கும் எண்டதைப் பற்றிக்கொஞ்சமாவது யோசிச்சீங்களா நீங்க?"
"முந்தி எண்டால் கொப்பனுக்குப் போக்கிடம் இல்லை...இப்ப இருக்குது... அதுதான் போயிற்றோர்!"
அம்மாவின் பேச்சு அருந்ததிக்கு சினத்தை மூட்டிற்று.
இனி அம்மாவை எதிர்த்துக் கதைப்பதில் அர்த்தமில்லை என்றுணர்ந்தாள் அவள். எதுவும் பேசாமல் தனது அறைக்குள் போய் கதவைச சாத்திக் கொண்டாள்.

அடுத்த சில நிமிடங்களில் அப்பாவின் குரல் கேட்டது.
"அருந்ததி"
அவள் அவசரமாகக் கதவைத்திறந்துகொண்டு வெளியே வந்தாள்.
அப்பாவும் அவருக்குப்பின்னால் புவனராணியும்.
அம்மா கண்ணில்படவில்லை.
மற்றொரு அறைக்குள் போய் அம்மா மறைந்துகொண்டிருக்கிறாள் என்று அருந்ததிக்குப் புரிந்தது.
அப்பாவுக்கும் புரிந்திருக்கும்.
"அம்மா எங்கை...?"என்று சுற்றுமுற்றும்பார்த்தபடி விசாரித்தாள் புவனராணி.
"என்ன விசயம்?" கேட்ட அருந்ததியின் குரலில் கொஞ்சம் கடுமை தொனித்தது.
புவனராணி அதைப்புரிந்துகொண்டாளோ என்னவோ...களையிழந்திருந்த அவளது முகத்தில் ஒரு விரக்திப் புன்னகை படர்ந்தது.
"இண்டைக்கு நான் வெளிக்கிடுறன்... அதைச் சொல்லிப்போட்டுப் போவமெண்டு!"

"எங்கை?" என்று ஆச்சரியமாகக் கேட்டாள் அருந்ததி.
"ஊருக்கு!" என்றாள் புவனராணி.
"அங்கையா...? அங்கைபோய்...?"
"இங்கையிருந்தும் என்ன செய்யப்போறன்? இந்த அந்நியதேசத்திலை சொந்தநாட்டாரே வெளிநாட்டுக்காரர்மாதிரி...! இதைவிட அங்கைபோய் அயலட்டத்தோடை சேர்ந்து கஞ்சி குடிச்சாலும் நிம்மதியிருக்கும்..."
புவனராணி அதைத் தளதளத்த குரலில் சொன்னாலும் அதில் ஒரு உறுதியிருந்தது.
"இப்ப கொஞ்சநாளாய் அப்பாவுக்குத்தான் சரியாக் கரைச்சலைக் குடுத்திட்டன்...என்ரை பயண ஒழுங்குகளுக்கெல்லாம் அப்பாவைத்தான் கூட்டிக்கொண்டு திரிஞ்சனான்..."
அருந்ததிக்குப் புரிந்தது.
"ஏழுமணிக்கு பிளைற்...அப்பாவோடை நீயும் அம்மாவும் வந்து என்னை பிளைற் ஏத்திப்போட்டு வாங்கோவன்..."
"இரு புவனா....வாறன்....!"
அருந்ததியும் புறப்பட ஆயத்தமானாள்.
அறைக்குள்ளிருந்து அழுதுகொண்டிருந்த மனைவியைச் சமாதானப்படுத்த உள்ளே போனார் சண்முகம்.
"இதோ ஊரையே அழித்துவிடுகிறேன் பார்!" என்கிறதுபோல, இருட்டிக் கொண்டு வந்து இடியும் மின்னலுமாய் பெரிதாய் அட்டகாசம் பண்ணி, புயற்காற்றோடு அங்குமிங்குமாய்த் திசைமாறி அடித்துப் பெய்த மழை, ஈரத்தை உள்வாங்கிக்கொண்டு ஏதுமறியாமல்கிடக்கிற நிலத்திடம் தன் ஆவேசத்தைக் காட்டமுடியாமல் எங்கோ ஓடி மறைந்திருந்தது.

□□□

---


பூவரசு 7வது ஆண்டு நிறைவு

**இளையோர்க்கான போட்டிகள்!**

**"எங்கள் இளந்தளிர்களில்'**

வெளியாகியுள்ளன.

*உங்கள் பிள்ளைகள் போட்டிகளில் பங்குகொள்ள*

*உற்சாகமூட்டுங்கள்!*

## சமரசத்தில் ஓர் சமாச்சாரம்.

*கட்டுரை ஆசிரியர் திரு.எம்மெல்ஸார் அவர்களுக்கு!*

வணக்கம்.

புதிய பூவரசில் தங்கள் "சமரசத்தில் ஓர் சமாச்சாரம்" பகுதி ஒன்றை வாசிக்கப்பெற்றேன். அது விடயமாக தங்களுக்கு இதுவரை கிட்டாதுபோன ஓரிரு விடயங்களை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன்.

உங்கள் கட்டுரையின் தொனியில் இருவிடயங்கள் என்னைப்பற்றிய தவறான கருத்துக்களுக்கு வழிவகுக்கின்றன. அவற்றை அடுத்த கட்டுரைத்தொடரில் திருத்திக்கொள்ளுமாறும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

1. கட்டுரையின் ஆரம்பத்தில் "சஞ்சயன் இந்துமதத்திலிருந்து மதம்மாறி இருமதங்களும் பற்றிய அறிவுக்குறைவால் திரு. கமலநாதனிடம் வாங்கிக்கட்டிக்கொண்டார்"என்ற தொனிபுலப்படுகின்றது.

அது தவறு. நான் இந்து கத்தோலிக்கப் பெற்றோருக்குப் பிறந்தாலும் கத்தோலிக்கனாக வளர்க்கப்பட்டேன்.

இன்றைய காலகட்டத்தில் இருக்கக்கூடிய மத இன வெறிகள், தங்களைப்பற்றித் தம்பட்டமடிக்கும் மத, இனவாதிகள் மேல் ஏற்பட்ட வெறுப்புணர்வால் மதங்களைத் தவிர்த்து மனிதனாக வாழ முயற்சிக்கின்றேன். திரு.கமலநாதன் தனது மதம் சிறந்தது என்று சொல்லவருவதில் எனக்கு பெரிதாக சிக்கல்கள் இல்லை.ஆனால் மற்ற மதங்கள் எல்லாம் மட்டமானவை, மதம்மாறுபவர்கள் விபச்சாரிகள் என்னும் தொனியில் பேசும் அறியாமையை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதுபோக ஏதாவது ஓர் குறிப்பிட்ட மதத்தைச் சேர்வதால் யாரும் மேன்மை அடைவது இல்லை.

புத்தவர்களும், இந்துக்களும், இஸ்லாமியரும், கத்தோலிக்கரும் புரட்டஸ்தாந்தர்களும் தங்கள் மதவெறிக்காக மனிதர்களைச் கொல்வார்களானாலும் இம்மதங்களும் அவற்றின் போதனைகளும் எங்கே போயின எனக் கேட்கத் தோன்றுகின்றது. 'மதம்' என்ற பிரச்சினையை விட 'மனிதம்' என்ற பிரச்சினை பெரியதென்று தோன்றுகின்றது.

2. கட்டுரையின் இன்னொரு பகுதியில் "சஞ்சயனிடமிருந்து பதில் தாக்குதல் வராததால்..."என்று எழுதியிருப்பதும் தவறு.

திரு.கமலநாதனின் காரசாரமான சாடுதலின்பின்பு நான் பல நாட்களை நூல் நிலையத்தில் செலவழித்து அவர் சவால்விட்டதுபோல் பல எதிர்வாதங்களைத் தொகுத்து ஆதாரங்களுடன் அனுப்பியிருந்தேன். அதுமட்டுமல்லாமல் மதங்கள்பற்றிய ஆராய்ச்சிசெய்யும் பல்கலைச்

கழகங்களையும் குறிப்பிட்டு அவருக்கு ஓர் நீண்டபதில்(பல பக்கங்கள்) எழுதியிருந்தேன். அவருக்கு இஷ்டமானால் அக்கடிதத்தை பூவரசில் பிரசுரிக்கக் கொடுக்கவும் அனுமதித்திருந்தேன். பூவரசு ஆசிரியர் மூலம் அவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட அக்கடிதத்திற்கு ஒரு வருடத்துக்கு மேலாக இன்னும் பதில் கிட்டவில்லை. அதற்கு மாறாக புத்தக வெளியீட்டு விழாவுக்கு எனக்கு ஓர் அழைப்பு கிடைத்தது.
அவைபோக ஓர் ஆய்வுக்கட்டுரை எழுதுவதற்கு விதிமுறைகள் இருக்கின்றன. எதையாவது எழுதிவிட்டு, "நான் குமுதத்தில் வாசித்தேன்" என்று சொல்வதைவிட "குமுதம் இதழ் இல:, திகதி:, பக்கம்:, ஆசிரியர்:, தலையங்கம்:," போன்ற தகவல்களை கொடுக்க வேண்டும் என்பது நியதி. ஆசிரியர் கட்டுரையில் வேறு எந்த ஆய்வாளர்களின் நிலைப்பாடுகளையும் சரியான தகவல்கள் இல்லாமல் எழுதுவது வலுவற்றது. திரு.கமலநாதன் தனது கருத்தை நிருபிக்க முயல்வது மீண்டும் ஓர் தவறாகும்.
ஆய்வுக்கட்டுரைகள் எழுதுவதில் எனக்கு பல அனுபவங்கள் இருப்பதால் இதைக் கூற முடிகிறது.
திரு.கமலநாதனின் "ஆய்வுக் கட்டுரையை" எந்த ஓர் கல்வி, ஆய்வுத்துறைச் சஞ்சிகையும் ***(Journals)*** பிரசுரத்திற்கு ஏற்றுக் கொண்டிருக்கமாட்டாது. அக்கட்டுரை இப்போது நூல்வடிவில் இருப்பதால் ஆதாரமாக அமைந்துவிட்டது என்பதுமல்ல.
பைபிளும், குர்ரானும், மகாவம்சமும்,இந்துமத நூல்களும் எல்லாமே நூல்கள்தான் ஆனால் ஆதாரங்களல்ல. ஆராய்ச்சிக்கட்டுரை என்பது முற்றிலும் வேறு...
நன்றி

நட்புடன்
**சஞ்சயன்.**

பிற்குறிப்பு:

ஓர் ஆராய்ச்சிக்கட்டுரை(எல்லாத்துறைகளிலும்) வரையறைகளுக்கு உட்பட்டதாக இருக்கவேண்டும்.அல்லாவிட்டால் ஆராய்ச்சிக் கட்டுரையாக அவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கட்டுரையாசிரியர் தனது கட்டுரையில் இத்தகைய வரையறைகளைத் தவிர்த்திருப்பது கட்டுரையாசிரியரின் கருப்பொருளில் ***(gewicht)*** ஐயத்தை ஏற்படுத்தும். இதே ஆசிரியர் என்னுடைய விமர்சனத்தை விமர்சனமாக ஏற்றுக் கொள்ளாமல் விசர்த்தனம் என்று விமர்சிப்பது அவரது கோழைத்தனத்தைத்தான் பிரதிபலிக்கின்றது

*அன்புடன் திரு. சஞ்சயன் அவர்களுக்கு!*

எனது 'சமரசத்தில் ஒரு சமாச்சாரம்' பகுதிஒன்று வெளியாகியவுடனேயே உங்களிடமிருந்து ஆட்சேபம் விமர்சனப் பாங்கில் வந்துள்ளது.

விமர்சனம் எப்போதும் இருபக்க விழிப்புணர்வுக்கு வழிவகுப்பதாலும் கட்டுரையின் இரண்டு இடங்களில் உங்களைப்பற்றிய தவறான கருத்துக்களை வாசகர்பெற வழிவகுக்கும் விதத்தில் எனது தகவல்கள் அமைந்துள்ளதாக நீங்கள் சுட்டிக்காட்டியதாலும் இவை தொடர்பாக விளக்கமளிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

கட்டுரையில் வரும் தாஸ், ரகுமான் என்ற இருவரில் தாஸ் என்ற பாத்திரம் உங்களை மதம்மாறிகள் என்ற கூட்டத்துக்குள்ளோ, ஒன்றும் தெரியாதார் கூட்டத்துக்குள்ளோ அடக்கவில்லை. அப்படி வாசகர்களுக்கு காட்டவும் முயற்சிக்கவில்லை. (ஏனெனில் சைவ சமயமும் சர்வமத சமரசமும் தொடர்பான உங்கள் விமர்சனத்தை ஏற்கனவே வாசகர்கள் வாசித்தறிந்துள்ளனர்.)

ஆனால் அந்த விமர்சனத்துக்காக திரு.கமலநாதனால் நையப் புடைக்கப்பட்டீர்கள்.ஆகவேதான் 'சஞ்சயனும் நன்றாக வாங்கிக்கட்டிக் கொண்டார்' என்று கூற, ரகுமான் என்ற அடுத்தபாத்திரம் "...இவரின் ஆக்கத்துக்கு விமர்சனம் எழுதிய சஞ்சயனைத் திட்டியுள்ளார். சஞ்சயனின் எழுத்தினாலான விமர்சனத்தை அதேபாங்கான எழுத்தால் வெல்ல முயற்சிக்காமல் அது சஞ்சயனின் 'விசர்த்தனம்'என்கின்றார்"....

"இந்தத் தப்புக்காக இவர் பூவரசு ஊடாக வாசகர்களிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும்(இந்தமன்னிப்புக்கேட்டல் திரு.சஞ்சயன்தொடர்பாகவும்) இப்படி கூறுகிறது.

திரு.சஞ்சயன் அவர்களே இப்போது கூறுங்கள் இதில் யார்சொல்வதை நான் சொல்வதாக எண்ணுகிறீர்கள்?

திரு.சி.கமலநாதனின் கட்டுரையை முற்றும்முழுதாக ஆதரிப்பவர்களை (தாஸ் உட்பட) அது வெள்ளை என அடித்துக் கூறுபவர்கள் என வைத்துக்கொண்டால்,அக்கட்டுரையை முற்றாக மறுக்கும் மறுபகுதி வாசகர்களை(ரகுமான்உட்பட), இல்லை அது கறுப்புதான் என விடாப்பிடியாக நிற்பவர்கள் என எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது.

இவற்றுக்கிடையே வெள்ளையும் கறுப்பும்கலந்த சாம்பல் நிறம் ஒன்று இருப்பதை நாம் மறந்துவிடலாகாது என்பதை நினைவூட்டவே வாதப் பிரதிவாதங்களுடன்கூடிய விமர்சனத்தை திரு.சி.கமலநாதனின் கட்டுரை தொடர்பான மீள் ஆய்வாக இங்கே தருகின்றேன்.

உங்களது இரண்டாவது பிரச்சினையாகிய "சஞ்சயனிடம் இருந்து பதில்தாக்குதல் வராததால்...."என்ற ரகுமானின் கூற்று.

அதாவது நீங்கள் திரு.கமலநாதனுக்கு அனுப்பிய நீண்ட ஆதாரங்களுடன் கூடிய எதிர்வாதங்கள் அடங்கிய இரண்டாம் கடிதம் இதை அனுப்பிய தங்களுக்கும் அதைப்பெற்றவர்களுக்கும் மாத்திரமே

தெரிந்த விடயம் என்பதோடு அது பூவரசில் வெளியிடப்படாததால் அதை வாசகர்அறிய வாய்ப்பில்லை.ஆகவேதான் அந்த வாசகர்களின் ஒரு பகுதியை நியாயப்படுத்தும் ரகுமானுக்கும் அது தெரிந்திருக்க நியாயம் இல்லை.

இதுவே எனது தாழ்மையான விளக்கம்.

இல்லை இதை எல்லாம் ஏற்கமுடியாது, கட்டுரையின் இரண்டு இடங்களில்வரும் விடயங்கள் உங்களைப்பற்றிய தவறான கருத்துக்கே வழிவகுக்கின்றது என நீங்கள் இன்னும் கருதுவீர்களேயானால் அதற்காக மன்னிப்புக் கேட்கின்றேன்.

இவைதவிர உங்களது கடிதத்தில் குறிப்பிட்டிருந்த இன்னுமொரு விடயம். அதாவது மதம் என்ற பிரச்சினையைவிட மனிதம் என்ற பிரச்சினை பெரியதெனத்தோன்றுகின்றது என்பதாகும்.. இதில் மனிதப் என்பது முக்கியமான பெரியவிடயம் என்பதால் மதம் என்பது முக்கியமிழந்ததும் சிறியதும் ஆகிவிடாது. நாம் பேசும் இந்த மனிதப் எல்லாம் மதத்திலிருந்து பெற்றதே. அல்லது நமக்கு சொல்லித் தந்தவர்கள் பெற்றுக்கொண்டதும் அங்கிருந்தே.

"உன்னைப்போல் பிறனையும் நேசி" என்ற ஏசுவின் போதனையும், நாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"என்ற இந்து தத்துவமும், "அண்டைவீட்டான்பசித்திருக்க நீமட்டும்புசியாதே!"என்ற முஹம்மதுவின் போதனையும். ஜீவகாருண்யத்தைச்சொல்லும் பௌத்தபோதனைகளும், மனிதத்தின் அடிப்படையில் இருந்து பிறந்தவைகளே.

எந்தமதத்தினரானாலும், அவர்கள் நாகரிகம் அடைந்துள்ள இன்றைய நிலைக்கு ஆதாரமாக இருப்பதும் மதப்போதனைகளே. ஏதாவது ஒரு மதத்தின்பேரால் நிகழ்த்தப்படும் பொல்லாச் செயல்கள். அதை புரிவோரின் சிந்தனைக் குறைவால் ஏற்படுவதேயல்லாமல், மதப் அவர்களை தூண்டவில்லை. அப்படி நாம் நினைப்போமானால் அது நமது சிந்தனைக் குழப்பத்தை பிரதிபலிப்பதாகும்.

நன்றி.

அன்புடன்

**எம்மெஸ்ஸார்.**

எம்மெஸ்ஸார் எழுதிவரும்

**சமரசத்தில் ஒரு சமாச்சாரம்**

மூன்றாம் பகுதி

அடுத்த இதழில்!

# சத்தியத்தின் சுவடுகள்

## சுவடு பன்னிரண்டு

விதியென்று விட்டுக்கொடுத்தால் வினையே விதியாகும்!

ஒரு சிந்தனைவாதியின் கண்களில் நீதியின் நிழலசைவது தென்பட்டால் அதை அவன் சுட்டிக்காட்டி மற்றவர்களையும் அவ்வழியில் நடத்திச் செல்ல முடியுமா என்றுதான் சிந்திப்பான்.

அவனது கருத்துக்களின் தெளிவு சில உண்மைவாதிகளைப் பாதிக்கக்கூடும் என்றாலும் அவனது கருத்தின் ஆழத்தை உற்று உணர்ந்தால் அவனது தெளிவான எண்ணத்தை நிச்சயமாகப் புரிந்து கொள்ள முடியும்.

திரு.டொனால்ட் பீக்கோவைச் சந்திக்கவென ஆயத்தமாகிக் கொண்டிருந்த வேளையில் அவரது மனதில் பீக்கோ சிறிது காலத்துக்கு முன்பாக எழுதியிருந்த கட்டுரை நிழலாடியது. அதில் குறிப்பிடப்பட்டிருந்த கருத்துக்களின் தாக்கத்தைத் தாங்க முடியாத அன்றைய அரசு அதற்குத் தடைவிதித்திருந்தது.

ஓர் இனவாத அடக்குமுறைக் கொள்கையை அமுல்படுத்தும் அரசாங்கம் வெளியுலகை ஏமாற்ற ஓரளவு சுதந்திரம் அளித்து வேடிக்கை காட்டுவது இயல்பு. அன்றைய வெள்ளைய இனவாத அரசும் வெள்ளைய மிதவாத இயக்கங்களை கறுப்பர் சார்பாகக் குரலெழுப்ப அனுமதித்துக் கொண்டிருந்ததும் அப்படித்தான். என்றாலும் அம்மிதவாத வெள்ளையர் இயக்கங்கள் கறுப்பர்களுக்காக நீதி கேட்டுத்தான் நின்றன என்றாலும் அவர்களின் குரலெழுப்பலும்கூட அரச அங்கீகாரம் பெற்ற நடவடிக்கைபோல இருந்ததும்அவர்களின் பிறப்பால் – அதாவது வெள்ளையரென்பதால் – சகல சுதந்திரங்களும் அவர்களின் உரிமையாகத் தொடர்ந்தமையும் பீக்கோவை ஆழ்ந்து சிந்திக்க வைத்தன. அவர் மிகவும் நுணுக்கமாக அவதானித்து,ஆராய்ந்து எழுதியிருந்த கட்டுரை உண்மையான நீதிமானான திரு. டொனால்டுக்கு எரிச்சலை மூட்டியதில் வியப்பில்லை.

அவர் உண்மையாகவே நீதியை விரும்பி நின்றார்.பீக்கோவோ தனது இனத்தின் சிந்தனைக் கண்களைத் திறந்து விட வேண்டியவராக இருந்தார்.

பீக்கோவின் எழுத்துக்களில் மிதந்த கருத்துக்களில் சில பின்வருமாறு அமைந்து இருந்தன.

- எழிலன்.

"எந்தவொரு தனியினத்துக்கும் அழகிலும் அறிவாற்றலிலும் சக்தியிலும் தனித்துவமிக்க ஏகத்துவம் என்பது கிடையவே கிடையாது.ஆகவே நம் அனைவர்க்குமே வெற்றியின் சந்திப்புக்கான சந்தர்ப்பம் நிச்சயமாக உண்டு.

இந்த நாட்டிலே விதிக்கப்பட்டிருக்கிற வாழ்க்கை முறையின்படி ஏழைகளாக என்றென்றும் கறுப்பரினமே இருந்துவரும் என்பதை திட்டமிடப்பட்டவிதத்திலே அமைத்து வைத்திருக்கும் வெள்ளையரின் அரசமைப்பைத் தட்டியெறிந்து தங்களுரிமையைப் பறித்துவரும் சிலருக்கெதிராக போராடி தமக்குரியதைத் தாமே எடுத்துக் கொள்ளும் முடிவுக்கு வெகுவிரைவிலேயே கறுப்பின மக்கள் வர முற்பட்டால் அதில் வியப்படைய ஒன்றுமேயில்லை.

கறுப்பினத்தின் ஏகோபித்த நம்பிக்கையை நீண்டகாலமாகப் பெற்று இயங்கிவந்த இடதுசாரி – தீவிரவாத அமைப்புக்களுட்பட மிதவாத அமைப்புகளுக்குத் திரும்புவோம்.

கறுப்பின உலகம் செய்து விட்ட மிகப் பெரிய பிழை என்ன வென்றால் இனவாத வெள்ளையரசுக்கெதிராகக் குரல் எழுப்பும் அனைவரையுமே தமது சகாக்கள் என்று அதாவது தம்மவர் என்று நம்பி நிற்பதுதான்.

மிக நீண்ட காலமாகவே கறுப்பரினுலகமானது ஆட்சியிலிருக்கிற கட்சியை மட்டுமே தமதெதிரியாகப் பார்த்து வரப் பழகிக் கொணடுள்ளதே தவிர முழு ஆட்சியமைப்புமே தமது ஆத்திரத்துக்குட்பட்டதாக – மாற்றப்பட வேண்டியதாக இருப்பதாக – அதாவது மாற்றத்தின் முற்றுக்கட்டை முழு வெள்ளை இன ஆட்சியமைப்புமுறைமையுமேதான் என்பதை அவதானிக்கத் தவறிவந்துள்ளது. மிதவாத குரலெழுப்பலையே தமது தாரக மந்திரமாக வைத்துக் கொண்டு நீதிக்கு விழைந்து கறுப்பரினம் தொற்றிவந்துகொண்டிருந்தது. இது கறுப்பின எழுச்சியை உத்வேகப்படுத்த வழிடாமல் அமுக்கி சோர்வுற வைத்துவிடவே ஆளும் இனவாதிகளால் திட்டமிட்டவிதத்தில் பயன்படுத்தப்பட்டது.

கறுப்பினத்தின் நம்பிக்கையின் ஏகபோகவாதிகளான அவர்களை அடையாளம் கண்டுகொள்ளலும் புரிந்து கொள்ளலும் அவசியமானது.

கறுப்பினப் பிரதிநிதிகளின் பேச்சுவார்த்தைகளின் அனுபவரீதியான பிரதிபலிப்பானது அவ்வினத்தின் மன எழுச்சியை தடுக்கும் செயலாகவே மருவுருவெடுத்து வந்தது. அதாவது ஏதாவதொன்று கிடைத்து விடாதா என்ற ஏக்கத்தைக் கொண்ட நடவடிக்கையாகவும் எனக்குரியதைப் பெற்றுத்தான் தீருவேன் என்ற உறுதி இல்லாமல் நப்பாசையில் நடமாடும் நாடகமாகவுமே இருந்து வந்திருக்கிறது.

இந்த நிலைமை நிச்சயமாகத் தொடர்ந்திருக்க முடியாது என்பதையே காலச் சக்கரம் சுட்டிக்காட்டத் துவங்கியுள்ளது.

ஒரு புதிய தலைமையாய் உருவாகிவரும் இளந்தலைமுறையினர், மிதவாதிகளின் நடவடிக்கைகளைச் சந்தேகக் கண்கொண்டு அவதானிக்கத் தொடங்கி விட்டார்கள்.

தங்களுக்கான – தங்களின் சொந்த – அவசியமான போராட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது அவர்களின் அரசியல் இயக்கங்கள் ஒன்றில் தடை செய்யப்படுகின்றன அல்லது முற்றாகவே இயங்க முடியாமல் செய்யப்படுகின்றன. இந்த நடவடிக்கைகள் மீண்டும் ஒருமுறை வெள்ளையரின் கீழியங்கும் மிதவாத இயக்களுக்கு மட்டுமே கறுப்பினத்தவர்களுக்கான உரிமைப் போராட்டத்துக்கான குரலெழுப்பலுக்குத் தளம் அமைத்துக் கொடுக்கின்றன.வெள்ளையரும் கறுப்பரும் இணைந்து வாழும் சூழ்நிலைக்காக உழைப்பதற்கு முதல்படி தென்னாப்பிரிக்க முழு ஆட்சியமைப்பு முறைமையையுமே மாற்றியமைப்பதுதான்.
இரு இனங்களுக்கிடையிலும் நிறைந்து வழிந்து கொண்டிருந்த கறுப்பரினத்தவர்களின் தாழ்வுணர்வும் வெள்ளையரினத்தவரின் உயர்வுணர்வும்சுத்தமாக அகலுமுன், அவசரமாக ஏற்படும் இணைவுத் திட்டங்களால் ஏற்படுத்தப்படும் முடிவுகளால் பாதகமான விளைவுகளே நேர முடியும்.
செயற்கையான அவசர முடிவுகள் போலியான நம்பிக்கையினடிப்படையில் சிறுபான்மையான சில வெள்ளையர்களின் நேர்மையான எண்ணங்களை மட்டுமே கருத்திற்கொண்டு எடுக்கப்படுமென்பதால் யதார்த்தமில்லாத ஒருவித பொய்யான மனநிறைவு மட்டும் தென்படுமேயன்றி அடிப்படை மாற்றம் தோன்ற மாட்டவே மாட்டாது.

மிதவாதிகளின் கொள்கைப் பாதகையின் கீழ் முன்வைக்கப்படும் இணைவுத் திட்டம் முறியடிக்கப்பட வேண்டும். காரணம் , அது யதார்த்தத்தில் இல்லாத ஒன்றைக் கற்பனையில் அடைந்து விட்டதாக நம்ப வைத்துவிடும் பெரும் பிழையான வழிக்குள் நம்மைத் தள்ளி விடும்.
அதாவது இந்நாட்டுப் பல்லின மக்களையும் ஒன்றிணைப்பது கடினம் என்பதால் இப்படியானவையே முழுச்சுதந்திரத்துக்கான முதற்படி நடவடிக்கைகள் என்ற மாயையை அவை ஏற்படுத்திவிடும்.

## அறிந்தே இயங்கும் வெள்ளை மிதவாதம்

சக்தி மிக்க நிலையை நோக்கித் தன்னை நகர்த்திக் கொள்தலே அரசியலின் சாரமாகும்.வெள்ளையரின் ஆட்சியமைப்பின் சக்தியை மிதவாத வெள்ளைச் சிந்தனாவாதிகள் மிக நன்றாகவே கற்று வைத்திருக்கிறார்கள்.

இராணுவப் பாதுகாப்புச் செலவீனம் பற்றிய தமது மதிப்பீடுகளைத் தருவதில் அவர்கள் மிக விரைந்து நிற்கிறார்கள்.
இராணுவமும் போலீசும் கறுப்பினத்தவர்களின் ஆர்ப்பாட்ட மற்றும் அரச விரோத நடவடிக்கைகளை அமைதியான முறையிலோ பலாத்கார வழிமுறையிலோ

அடக்கியொடுக்க எத்தகைய சக்தியைக் கொண்டிருக்கின்றன என்பதை விபரமாக – ஐயந்திரிபற அவர்கள் அறிந்து வைத்துக் கொண்டிருக்கின்றார்கள். பாதுகாப்புத் துறையினர் கறுப்பின மக்களிடையில் எவ்வாறு எவ்வளவு தூரத்துக்கு ஊடுருவி இருக்கிறார்கள் என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே கறுப்பினத்தவர்களின் பலவீனமான நிலைப்பாடு அவர்களுக்கு மிகமிகத் தெளிவாகத் தெரிந்த விடயமாகவிருக்கின்றது.
அப்படியிருக்க, ஏன் அவர்கள் கறுப்பின மக்களுடன் பேச ஆளும்வர்க்கத்தை வற்புறுத்துகின்றார்களில்லை? இந்நாட்டின் சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படை இனவொதுக்கல் முறையென்ற காட்டுமிராண்டித்தனமான கொள்கை என்பதை அவர்கள் முற்று முழுதாகவே உணர்ந்திருக்கும் போது, ஏன் அதைப்பற்றி வெள்ளையர் உலகத்தின் முன் எடுத்துச் சொல்லி சக்திமிக்க சாட்சிகளாக நீதிக்குக் குரலெழுப்பப் பயப்படுகின்றார்கள்?

இதைக் கவனத்துக்கெடுத்துச் சிந்தித்தால் மிகவும் மனவருத்தத்துக்குரியதான பின்வரும் முடிவுக்கே நாம் வரவேண்டியவர்களாயிருக்கின்றோம்.

மிதவாதியானவர் கறுப்பர்களுக்கான உரிமைக் குரலெழுப்புவதன் மூலம் தமது மனசாட்சியைச் சாந்தப்படுத்திக் கொள்வதுடன் கறுப்பினத்தவர்கள் மத்தியில் பிரபல்யம் தேடுவதோடு அதைத் தமது, நிற அடிப்படையிலான சுய இன உறவுக்கு பாதகப்படுத்தி விடாத அளவுடனே மட்டுமே கடைப்பிடித்துக் கொள்கிறார் என்பதுவே உண்மையாகவிருக்கின்றது.

ஒரு பிறவி வெள்ளையன் என்ற விதத்தில் அவருக்கு உள்ள சகல உரிமைகளையும் அவர் அங்கீகரித்து அனுபவித்துக் கொள்கின்றார். அதே வேளை அவர் தம்மைக் கறுப்பினத்தவர்களுடனும் அடையாளப்படுத்தியும் கொள்கின்றார்.

வெள்ளையர்க்கு மட்டுமே எனப் பிரித்து வைக்கப்பட்டுள்ள கடற்கரை – நீச்சல் குளங்கள் – திரைப்படமனைகள் – கேளிக்கையில்லங்கள் அனைத்திலும் அவர் தம் உரிமையை அனுபவித்துப் பகிர்ந்து கொள்ளத் தயங்குவதில்லை. அதாவது மனரீதியாக இன்றைய நிலை அவரது சுகமான சுதந்திரமான வாழ்க்கைக்கு வழங்கும் உத்தரவாதத்தை அவர் உணர்ந்து ஏற்றுக் கொண்டே வாழ்கிறார். எனவே மாற்றத்துக்கான அவசியம் அவரது மனதை அழுத்தாமையை அவர் அனுபவமாகக் கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

அவர் தேசியவாதிகளுக்கு வாக்களிக்காத போதிலும் அவர்களின் இனவொடுக்கு முறையினால் விளையும் சௌகரியங்களை ஏற்பதையும் அதனடிப்படையில் மாற்றத்தின் அவசியத்தை மறப்பதையும் கைவிடாதவர்களாயிருக்கிறார். நான் அவர்களைக் குறை மட்டும் கூறவோ நடவடிக்கைகளையெல்லாம் வசைபாடவோ முனையவில்லை. அவர்கள்தாம் கறுப்பினத்தின் துயர்களுக்கெல்லாம் பொறுப்பென்றும் கூறவில்லை. ஆனால் அடிப்படை உண்மைகளையே படம் பிடித்துக் காட்டுகின்றேன். அதாவது

ஒரு குழுவின் வயிர்வையில் இன்னொரு குழு சுகமனுபவிக்கும் அநீதியான அமைப்பு முறையின் கீழ் நின்று கொண்டு எதிர் தரப்பிற்குத் தம்மை அடையாளம் காட்டி அங்கீகாரம் தேடுவது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதையே விளக்குகிறேன். அது ஒவ்வவே ஒவ்வாத விடயமாகும்.

வெள்ளையராகப் பிறந்தவர்க்கு ஆளும் அரசை ஆதரித்தாலு மட்டும்தான் சலுகை மிகுந்த உரிமை என்றில்லை. அது அவரது பூரண உரமையென அவரது இன அமைப்பின் அத்திவாரத்தில் அமைந்துள்ளபடியால் அவர் சுதந்திரமான உரிமைவாதியாகவிருக்கிறார். கறுப்பினச் சக்தியை இரக்கமற்ற விதத்தில்சார்த்துக் கொண்டு அதில் அந்த இனம் சட்டபூர்வமாக சுகம் அனுபவிக்கின்றது.

மிதவாத வெள்ளையர்களுக்கு அவர்களின் சொந்த விடயங்களில் போராட வேண்டிய கடமை இருந்தால் அதற்காக – அதாவது அவர்களின் சுதந்திரத்துக்காக அவர்கள் போராடிக் கொள்ளட்டும்.தம்மோடு அடையாளப்படுத்திக் கொள்ள முடியாத கறுப்பர்களுக்காக வேண்டாம்.

நான் சுட்டிக் காட்டி விளங்க வைக்க முனைவது என்னவென்றால்.....
தென்னப்பிரிக்காவில் அரசியல் அதிகாரம் வெள்ளையர் சமுகத்தில் மட்டுமே எப்போதும் தங்கி வந்திருக்கின்றது.
வெள்ளையர்கள் எம்மைத் தாக்கிவரும் குற்றவாளிகள்மட்டுமல்ல அவர்களின் தாக்கத்தின் கடுமையைத் தாங்க முடியாமல் கிளர்ந்தெழும் நியாயமான பதில் நடவடிக்கையை அடக்கியொடுக்கிய குற்றவாளிகளாகவும் இருக்கின்றார்கள்.

அவர்கள் எம்மை எட்டி உதைக்க மட்டும் செய்யவில்லை.உதைத்தால் எப்படித் தாங்கிக் கொள்ள வேண்டும் என்றும் கற்பித்துவிட்டுத் தொடர்ந்து தாக்குகிறார்கள். காலம் காலமாக அவர்களது உதைக்கு எப்படிப் பிரதிபலிப்பது என்று அவர்களே காட்டி வைத்த வழியைப் பொறுமையுடன் கேட்டுக் கொண்டு மெதுவாக ஆனால் பெருந்துயருடன் வாழ்ந்து வந்த கறுப்பினன்இப்போது தனக்கு விழுந்த உதையை எப்படித் தந்தவனுக்குஉரிமையுடன் திருப்பிக் கொடுப்பது என்றும் அதை ஏற்றவிதமாகஎப்படிக் கொடுப்பது என்றும் காட்டத் துவங்கி விட்டான்.
பிக்கோவின் கட்டுரை இந்த விதமாக குட்டக்குட்டக் குனிந்து நிற்கும் குருடர்க்கு வழி சொல்லிச் சொல்லத் தன் வழியை விளக்கக் கொண்டிருந்தது!

**அவலத்தைத் தந்தவனுக்கே அதைத் திருப்பிக் கொடு என்று யாரோ சமீபத்தில் சொன்ன சப்தம் கேட்கிற மாதிரியில்லை?**

தொடரும்

## எழுதவைக்கும் ஏந்தல்கள்.

போதைதனில் திளைத்த
பொய்முகங்கள் பல பார்த்தேன்
வேளையொரு உணவுக்காய்
வேண்டுமிரு கரம் பார்த்தேன்
காலையின்றி மாலையின்றிச்
கதறும் குரல் கேட்டேன்
சாலைகளே சந்நிதியாய்
சரணடையும் மனிதகுலம்!

வர்க்க பேதங்கள்,
வகுப்பு வாதங்கள்,
வரம்பில்லா வாழ்க்கைகள்!!
சொர்க்கமென நினைத்துச்
சுதந்திரத்தை மறந்தோரிங்கே!

அட்டையென உறிஞ்சும்
அநியாய முதலைகளும்
பட்டையென நீறணிந்த
பகல் வேட பாதகரும்
பாஸ்போட் தேடிப்
பலதேசம் பறப்போரும்
பணம்வந்து சேர்ந்ததன்பின்
பழசுகளை மறப்போரும்
குணம் மாறிக் குலமாறிக்
கொள்கையினை விற்போரும்
கூடவிருந்து குழி
பறிக்கும்கலை பயின்றோரும்
என்னைத் தூண்டி
எழுத வைக்கும் ஏந்தல்கள்
இன்னும் எழுதிடுவேன்
என்னோடிருக்க இந்த சமுதாயம்.!!



-இ.சம்பந்தன்.

உருவகம்.

# நிதர்சனம்.

அந்தி சாய்ந்துகொண்டிருந்தது.
யாகத் தீயில் தன் குருதியைக் கொட்டிக் கொண்டிருந்த கதிரவனின் எஞ்சிய கதிர்களும் கடலலைகளோடு கலந்துவிட்டன போலும்.
வீட்டுக்கு வீடு விளக்குகள் விழித்துக்கொண்டன.
சீ...சடங்களுக்கு ஏது விழிப்பு?
சிலவேளை இருக்கலாம்.
விழித்துக்கொள்ளாதவை சடங்களாகும்பொழுது, விழித்துக்கொண்டவைகளுப் ஏன் அவ்வாறிருக்க வேண்டும்?
வளையல் கைகளின் பராமரிப்பில் வைரமாக மின்னும் விளக்கு சுற்றுமுற்றுப் பார்த்தது. ஒருமுறை தன்னையும் பார்த்துக்கொண்டது.
"பெரிய சூரியன்..சூரியன் என்கிறார்களே.. இப்போதுமட்டும் அது எங்கேயாப் போய்விட்டது? என்னுடைய தயவுமட்டும் இவர்களுக்கு இல்லையேயானால் இந்த மண்ணுலகென்ன...விண்ணுலகுகூட இருளில் மூழ்க வேண்டியதுதான்... இப்படியாக இந்த வையகம் முழுதிற்குமே ராஜாவாக தீபமென்னும் கிரீடம் அணிந்து கொலுவீற்றிருக்கும் எனக்கு இனிமேல் இவர்கள் உரிய மரியாதை செலுத்தவேண்டும்... பூஜைக்கான பொருளாக்காமல் எனக்கே பூஜைகள் இடம் பெறவேண்டும். கொண்டாட்டங்களும் குதூகலங்களும் என்னை நோக்கியே பின்பற்றப்படவேண்டும்....ஆமாம்...ஆமாம்...."
விளக்கு உணர்ச்சிவசப்பட்டுக் கூறிக்கொண்டது...

மணித்தியாலங்கள் சில கழிந்தன.
"ஆ...ஐயோ! சுடுகிறதே...! ஆ...ஆ...யாராவது என்னை காப்பாற்றுங்களேன்...! எண்ணெய் முடிந்து திரி பெரிதாக பற்றி எரிய ஆரம்பித்ததனால் ஏற்பட்ட சூட்டை விளக்கால் தாங்க முடியவில்லை....
கனிவோடு கணத்தில் அங்குவந்த வளைக்கரங்கள் எண்ணெய் இட்டு வகை செய்துவிட்டு சென்றன. விளக்கிற்கு பெரும் வெட்கமாய் போய்விட்டது.
"இவர்களுக்கு இந்த எண்ணெயை எனக்கருகில் வைத்தால் என்னவாம்...? ஒவ்வொரு முறையும் இவர்களை அண்டித்தான்... நான் வாழவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களோ...! இதை மாற்றி புதுசட்டம் செய்வேன் நான். என்னைப் பற்றித் தெரியாமல் விளையாடுகிறார்கள் இவர்கள்...!"
சிவந்த தீயிடையே ஆற்றாமையினால் எழுந்த அனலான சீற்றத்துடன் விளக்கு கூறியது.

நடுநிசியை அண்டி பொழுது நகர்ந்தது.
திரியைப்பதித்து தீபத்தை உறங்காதகுறையாக வைத்தார்கள். விளக்கிற்கோ



பொறுக்க முடியவில்லை. மிதமிஞ்சிய ஆத்திரத்தில் பொங்கிவந்த கண்ணீரையே எங்கே தன்னை அழித்துவிடுமோ என்றஞ்சி சிந்துவதைத் தவிர்த்துக் கொண்டது.
ஆத்திரம் தணிந்தபின்னர் சிந்திக்கத் தலைப்பட்டது.
"ஆமாம்....ஏன் இப்படி... எதற்காய்...?"என்று அடுக்கடுக்காக எழுந்த கேள்விகளின் அடிப்படையில் எண்ணத்தைச் செலுத்தியது.
"சரியம்மா....!" என்றவாறே தாயிற்கு பதில் அளித்தபடி ஆர்வத்துடன், தன் பிஞ்சுவாய்களினால் காற்றை வாங்கி விளக்கைக் குறிவைத்து ஊதினான் சிறுவன்.
ஒருமுறை...இரண்டாம் முறை...மூன்றாம் முறை...விளக்கு விழிமூடிக்கொண்டது.

கீழ்வானில் பகலவன் படர்ந்துகொண்டிருப்பது கண்ணைவெட்டும் அதன் சூரியக் கதிர்களினால் தெரிந்தது.
விடியல் தொடர்கிறது...ஆமாம்...! உதயம் என்றும் உறங்குவதில்லை.
பார்வைகளின் தப்புக் கணக்குகளே பாரங்களுக்குக் காரணமாகின்றன.

-சு. பிரசாந்தன்.

## வந்திடுமோ மனம் எந்தனுக்கு.

தஞ்சம் எம் மண்ணென்று
கொஞ்சி நின்ற மாந்தரங்கே
பஞ்சம் பசியென்றும்
பட்டினிச் சாவென்றும்!

பிஞ்சுக் குழந்தையும்
பெரியோரும் சிறியோரும்
வேதனையால் தினம்
வெந்து மடிகையில்....

மஞ்சள் நிலவையும்
மங்கை அழகையும்
வண்ண மலரையும்
வண்டின் செயலையும்
வர்ணித்துப் பாடிட
வந்திடுமோ மனம் எந்தனுக்கு.

தேசம் நமதாகவேண்டும் — தமிழ்
தேசியம் உருவாக வேண்டும் என்று
பூவையர் அங்கே
புயலாகி நிற்க..
தேகசுகம் பற்றித்
தேன்சொட்டும் கவிபுனைய
வந்திடுமோ மனம் எந்தனுக்கு.

சொப்பனத்தில்கூட
சோகங்களே நிறைய...
சுதந்திரம் ஏதுமின்றி
துயரே காணும் வாழ்வில்
கற்பனைக் கடலில் மூழ்கி
காதல் கவி புனைய
வந்திடுமோ மனம் எந்தனுக்கு.



கொற்றையூர் வாசன்.

" பொறுத்தது போதும் மனோகரி
பொங்கி எழு!" என்று பெண்களுக்கு
அறைகூவல் விடுத்தார் திருமதி விஜயா
அமலேந்திரன். பூவரசு ஆடி ஆவணி இதழில்.

" பொறுத்தது போதும்
மனோகரா பொங்கி எழு!"
என்று ஆண்களை அழைத்தார்
திரு.சோழியான்
பூவரசு புரட்டாதி ஐப்பசி இதழில்.

## "மனோகரி!
## சோழியர் குடுமி சும்மா ஆடுகிறது!"

எச்சரிக்கிறார்-
-திருமதி விஜயா அமலேந்திரன்.

பெண்ணினத்துக்கு ஒரு பெண்ணால் விடுக்கப்படும் எச்சரிக்கையை அதிலுள்ள நியாயத்தை இன்னொரு பெண்தான் குறைகண்டால் எடுத்துச் சொல்லி வாதாடியிருக்கவேண்டும்.
எம்மினம் என்னை உணர்ந்திருக்க, சோழியர்குடுமி விடுவிடு என்று ஆடத் தொடங்கியிருக்கிறது.
முன்னுக்குப் பின் முரணானவர்கள்தாம் என்னினத்தவர்கள்.
உதாரணம் வேண்டுமா? ஓடிவாருங்கள் ஓடிவாருங்கள் இதோ நானிருக்கிறேன் என்று வாயைக்கொடுத்து மூக்கை உடைத்துக்கொண்டிருக்கிறார் நமது சோழியார்.
தலைப்பில் மனோகரா பொங்கியெழு என்று அறைகூவல் விடுத்துவிட்டு பொங்காதே அமுங்கிப்போ என்று தமது கட்டுரை முடிவில் கொட்டாவிவிட்டு முடித்திருக்கிறார்.
நான் சொன்ன உதாரணங்களையெல்லாம் தனது முழு இனத்துக்குமே என்று அவரே ஒத்துக்கொண்டுவிட்டு, பூவரசு ஆசிரியரையும் எனது திருவாளரையும் எம்மிருவர் வீட்டுக்குள்ளும் புகைவராதா என்று ஏக்கத்துடன் மூட்டிவிட முயன்றிருக்கிறார். திருமதியா நாங்கள் தெளிவாகச்சிந்திப்பவர்கள். ஆதலால் இந்தக் கயிற்றில் சிக்கிக் கொள்ளமாட்டோம்.
இந்த சமுதாயத் தலைவர்கள் தங்கள் சுயபாதுகாப்புக்காக தாங்களாகவே எதிலும் தங்களின் கீழேதான் பரம்பரை என்று அமைத்து வைத்துக்கொண்டு இதுதான் இயற்கையென்று நிரூபிக்கமுயல்வதைக் காணச் சிரிப்புத்தான் வருகின்றது.
சண்டை போடவல்ல நான் மனோகரியைத் தட்டியெழுப்பியது, கண்களைத் திறந்துகொள்ள. குற்றமுள்ள நெஞ்சங்களுக்கே எங்களின் முறைப்பாடுகள் குற்றப் பத்திரிகைகளாகப்படும்.

இந்தப் பெரியவர் தம்மினத்துக்காக வரிந்து கட்டிக்கொண்டு நிற்கின்றாரே இவரது வாதத்தை இவரது மனைவியாரே சரியென்று ஏற்று நமக்கு நமது தவறாகச் சுட்டிக்காட்டியிருந்தால்தான் அதில் நியாயமிருக்கின்றதா இல்லையா என்று ஆராயலாம். ஆனால் திருவாளர் சோழியாரின் குடுமி சும்மா ஆடவில்லை குற்றமுள்ள நெஞ்சு குத்தியதால் துள்ளிய துள்ளலில்தான் ஆடுகிறது என்பது மட்டும் தெளிவாகப் புரிகின்றது.

ஏதோ சந்ததி காப்புக்காக சமூகம் வகுத்தவிதி என்று குறிப்பிடுகின்றார். அவரது பலவீனமான நிலைமையைப் பாருங்கள்.

பல ஆடவருடன் தொடர்பற்ற, மது சிகரட் பாவிக்காத புனிதமானவளாக என்ற வரிகளை எழுதுகையில் அப்படிப் பாவிப்பது புனிதமற்ற செயல் என்பதை அப்பட்டமாக ஒத்துக்கொண்டு அவரின் இனத்தின் இலட்சணத்தை அவரே பிட்டு வைக்கின்றாரா இல்லையா?

நாம்செய்தால் புனிதக்கேடு என்கிறவர் அவற்றின் ஏகபோக ஏஜெண்டுகளாக பவனிவரும் அவரினத்துக்கு அதை என்னவிதமாக அனுசரிக்கச் சொல்கிறார்?

அது சரி இந்தத் தமிழ்ச்சமூகம் என்ற அவரது குறிப்பில் இந்தவிதமான முடிவெடுப்புக்களுக்கெல்லாம் பெண்களை எத்தனை சதவீதம் கேட்டு முடிவெடுத்திருக்கின்றார்கள் என்று சொல்லுவாரா?

முழுத்தமிழ் இனத்துக்காகவும் நான் எழுத- இவர் ஒருபடி மேலே வந்து வெளிநாட்டில் வாழும் பெண்களின் பிரச்சினையென்று புதுக்கிளை அமைத்து வாதாடுகின்றார். றாத்தவுஸ், ஆஸ்பத்திரி என்று அலைகிறார்களாம். சும்மா வீட்டில் அடைந்துகொண்டு சோசியல் காசில் குடும்பம் நடத்தும் பெரிய மனிதர்களுக்கு இதுதானே சரி? வேறு என்னதான் செய்வார்களாம்?

உண்மையாய் உழைத்துவாழும் கண்ணியமான ஆண்களுக்கு எனது கருத்துக்களிலுள்ள நியாயம் நிச்சயம் விளங்கவே வேண்டும்.

அதிகார, ஆணவ, கட்டுப்பாட்டு, வர்க்கக் குணத்துக்கு அவர்கள் ஆண்மை என்றும், அடங்கிப்போகும் அடிமைத்தனத்துக்குப் பெண்மை என்றுப் மனுநீதியல்ல ஆண் நீதியே அத்திவாரமமைத்திருக்கின்றது என்றால் மறுக்க முடியுமா அவரால்?

இவர்சொல்லும் மொழிபடிப்பதில் பெண்களின் பங்குபற்றிய கருத்து சிரிப்பைத் தான் ஊட்டுகின்றது. தாங்களே சரியாகப் படிக்காமல் தங்கள் மனைவிகளை கிளாசுக்கனுப்பிவிட்டு, பியர் போத்தலுடன் வீடியோ முன் அமர்ந்து நல்ல பொழுதையெல்லாம் கூட்டிக் கெடுப்பவர்கள் இவர் கண்களைவிட்டுத் தப்பி விட்டார்களா அல்லது அன்னாரும் அவ்வழித் தலைவர்களில் ஒருத்தர்தானா?

வீட்டுக்குவீடு வாசற்படி. பொறுப்புள்ள கணவர்களும்கூட முழுமையாக ஒத்துழைக்காத காரணங்களால் வேலையதிகம் காரணமாக சேர்ந்துவிடும் அரைகுறைகளைத் திடீர் விசிட்டர்கள் கண்ணுக்கு மறைத்துவிட பகீரதப் பிரயத்தனம் செய்வது குடும்பத்தின் அதாவது நமதும் அவரதுப் மரியாதையைக் காக்கவே என்பதை நன்றியுடன் நோக்காமல் குற்றக்கண் திறக்குமிவர் தமது நெற்றிக் கண்ணைக் கொஞ்சம் திறந்துகொள்வாராக!

உடைமைகளை நிறுத்துப் பார்க்கச் சொல்லும் திருவாளர் சோழியாரின் எழுத்துக்களில் நகைமோகமும் உடை மோகமும் தெரிகிறதே தவிர அவ்வுடைகளுடன் மனைவி பங்குகொள்ளும் விழாக்களிலும் சடங்குகளிலும் தமது தலையை நிமிரவைத்து நடமாடவைப்பதை மறந்துவிட்டாரா அல்லது..... சோழியார் விழி பிதுங்குகிறதைப் பார்க்கமுடிகிறதா இல்லையா?

கணவனாக நிற்கத்தெரியாத ஒருகட்டையை உதாரணங்காட்டி முட்டாளுக்குத் தலைவணங்கா கொடுமைக்காரி என்று குறிப்பிடுபவர், படிப்பறிவில்லாத அல்லது அரைப்படிப்பு மேதையரைக்கட்டிக்கொண்டு வெற்றுவேட்டு வீரர்களின் வீராப்புக்களால் அடியும் உதையும் அவமானமும்பட்டு அல்லும் பகலும் அங்கலாய்க்கும் தாய்க்குலத்தைத் திரும்பிப் பார்க்கவே தயங்குகின்றார். சமத்துவமான மரியாதைக்குத் தகுதியுள்ளவனாக நடந்துகொள்ளும் சரியான ஆண்பிள்ளையை எந்த மனைவியும் அலட்சியப்படுத்த மாட்டாள். பொருத்தமில்லாத பொம்மைகளையெல்லாம் இவர்களின் போலிச் கட்டளைகளால் அங்கீகரித்துவிட்ட தவறினால்தான் தாய்க்குலம் தத்தளித்துச் கொண்டிருக்கின்றது.

தங்கத்துக்கும் வைரத்துக்கும் பெறுமதி அழகானதால்தான் என்கின்றார். என்ன வாதம் இது? அழகான நகையாகாவிட்டால் இவற்றுக்குப் பெறுமதி இல்லையோ? கண்ட இடத்தில் வைத்தால் கண்டவனும் காவிக்கொண்டு போவான் என்கின்றார். யார் இந்தக் கண்டவன்? ஆண்பாலா பெண்பாலா? மதங்களுக்குள் புகுந்துகொண்டு சோழியார் பாதுகாப்புதேடமுயன்று தம்மைத் தாமே காட்டிக்கொடுத்துக்கொண்ட புதிய விஜயரகுநாதத் தொண்டைமானாக நிற்பது பெரிய வேடிக்கை.

இஸ்லாமியர் பெண்களை பள்ளிவாசலுக்குள் அனுமதிப்பதில்லையாம். யாரையா அந்த இஸ்லாமியர்? ஆண்களான இஸ்லாமியர்தானே?

பைபிளுக்குள் குதிக்கிறார்.

முக்காடிட்டு செபிக்க வேண்டுமென்ற கட்டளையினடிப்படையென்ன தெரியுமா? ஆண்கள் மனவுறுதியற்றவர்கள். வெறும் மனபலவீனர்கள். அவர்களுக்கு சந்தையும் தெரியாது தெய்வ சந்நிதியும் புரியாது. வெறும் சடமனது கொண்டவர்கள். ஆகையால் உன்னைப்போல் நினைத்து அவர்களை நடத்தாதே என்ற மறைமுக எச்சரிக்கைதானே! அதைவிடுவோம். இவ்வளவு அக்கறையாக ஆண்டவன் சொன்னார் என்று எழுதிவைத்தவர்கள் யார்? சாட்சாத் நமது சோழியாரின் சொந்தவகையினர் மட்டுந்தானே! தமக்கென வாழும் இனம் நமக்கென சட்டமியற்றினால் அதில் சுயநலம்தானே இருக்க முடியும் என்று சந்தேகித்தால் அது பாவமா? நரகம் கிடைக்குமா? கலாச்சாரம் விலங்கிடுகின்றது என்று நாம் சொல்லவில்லை. கலாச்சாரப் போர்வையில் எமக்கு விலங்கிடவேண்டாம். உங்கள் பிழைகளுக்கு நீங்களே விலங்கிடக் கற்றுக் கொள்ளுங்கள் என்றுதான் கூறுகின்றோம்.

பெண்ணினத்தைப் பாதுகாப்பதற்காக சட்டங்களை வரையறுக்கும் ஆண் சமுதாயம் பெண்ணினத்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவிருக்கும் ஒரேயொரு கருவியான தம்மினத்தை அதாவது ஆணினத்தை வழிநடத்தும் கட்டுப்பாடுகளை ஆணித்தரமாக நமதுதமிழ்க்கலாச்சாரத்துக்குள் நடைமுறைப் படுத்தட்டும் பார்க்கலாம்.

பொங்கலோ பொங்கலென்று முடித்திருக்கும் சோழியாரே! அதைக்கூடப் பொங்கித்தர பெண்ணினமே இருக்கின்றது என்பதையாவது உணர்ந்து ஏற்றாலே போதுமே! செய்வீரா?

□□□

(17ம்பக்கத்தொடர்ச்சி

குவித்திருக்கிறார்கள். பொதுமக்களை எமது தலைவர் போரில் ஈடுபடுத்த நிர்ப்பந்திக்கவில்லை. பாதுகாக்கத்தான் பாடுபட்டிருக்கிறார்.

ஐம்பது வருடங்களுக்கு முன்னர் ரஷ்ய எல்லையை ஊடறுத்தவாறு புகுந்த ஜேர்மனிய இராணுவம் பல நகரங்களைக் கைப்பற்றி ஸ்டாலின் நகருக்குள் நுழைந்தபோது, ரஷ்ய படையான செஞ்சேனையுடன் ஸ்டாலின்கிராட் சேர்ந்து, ஒவ்வொரு கட்டிடங்களுக்காகவும் போராடினார்கள். ஸ்டாலின்கிராட் வீழ்ந்துவிடுமோ என்ற அவலநிலை தோன்றுமளவிற்கு ஜேர்மனிய இராணுவம் முன்னேறியபோதும், பலமக்கள் மடிந்து இரத்தாறு ஓடியபோதும், அவர்கள் மனம் தளராது போராடி, உலகமே வியக்குமளவிற்கு வெற்றிபெற்றார்கள். அதனால் இன்றும் சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளார்கள். அந்த மக்கள் சந்தித்த வரலாற்று நெருக்கத்தை இன்று குடாநாட்டு மக்கள் சந்தித்துள்ளனர். ஆயினும் மக்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர். இந்த இன்னல்கள் எல்லாம் தற்காலிகமானது. இழந்த மண்ணை மீட்பது உறுதி. வாழ்க தமிழீழம்! வணக்கம்!"

அவனது உரை நிறைவடைய, கூட்டத்தில் அதுவரை நிலவிய அமைதி கலைந்து கரவொலி கிளம்பியது.

அவ் இளைஞனின் பேச்சு கீதாவை மிகவும் கவர்ந்தது. பேச்சைக் கேட்கும் ஆர்வத்தால் மாலதியைவிட்டு மெல்ல நகர்ந்து ஒலிபெருக்கி வாகனத்தை அண்மித்தவள், அவ் வாலிபனின் பேச்சு முடிந்ததும் ஒலிவாங்கி வைத்திருப்பவரிடன் ஏதோ கூற, ஒலிவாங்கி அவளது கைக்கு மாறியது. கணீர் என்ற குரலில் பேசத் தொடங்கினாள்.

"அன்புள்ள சகோதர சகோதரிகளே! எமது தாய் தந்தையரே! இனிய தமிழீழத்தின் பிரதிநிதிகளே!! எமது மண்ணில் சிங்களப்படைகள் நடாத்தும் ஒவ்வொரு இராணுவநடவடிக்கையிலும் உயிர்களை இழந்து, காயமடைந்து அங்கவீனர்களாவதுடன் காலங்காலமாகச் சேர்த்த சொத்துக்களையும் பண்பாட்டுச் சின்னங்களையும் ஒரே இரவில் இழந்து ஓட்டாண்டிகளாகும் அவலநிலை தமிழரின் தலைவிதியாகிவிட்டது. கடும் உழைப்பால் ஒருவன் பணத்தைச் சேர்த்து அதைப் பெட்டியில் வைத்துப் பூட்டாது திருடனிடம் பறிகொடுப்பதுபோல், எமது மக்களும் தமது உடமைகளை எதிரியிடம் இழக்கிறார்கள்.

தேனீக்கள்கூட தாம்சேர்த்த தேனைப் பாதுகாக்கவென ஒரு காவற்படையை வைத்திருக்கும்போது, தமிழன் உழைப்பதில்மட்டும் திருப்தி அடையலாமா? முன்னேறிவரும் எதிரியின்படையை அழிக்க, போராளிகளுக்கு உதவாது விட்டால் சொத்துக்களை இழந்ததுபோல் உயிர்களையும் இழக்க நேரிடும். எனவே வீட்டுக்கு ஒருவராவது போராட்டத்தில் இணைந்து எதிரியைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

எமக்கென ஒரு நாடு இருந்தால்தான் எமக்கென ஒரு வீடும் இருக்க முடியும். சுதந்திரமானதொரு நாடும் பாதுகாப்பானதொரு வீடும் இருக்க வேண்டுமாயின் பலம் பொருந்திய படையொன்றை நாம் கொண்டிருக்க வேண்டும்...

கீதாவின் அர்த்தமுள்ள ஆழமான சிந்திக்கவைக்கும்பேச்சு வாலிபர்தொடக்கம் வயோதிபர் உள்ளம்வரை தொட்டது. மாணவர்கள் பலர் நான், நீயென்று விடுதலை இயக்கத்தில் இணைவதற்கு முண்டியடித்துக் கொண்டு முன்செல்வதைப் பெற்றோர்கள் உணர்வுடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பேச்சை முடித்துக் கொண்ட கீதாவின் கன்னத்தில் ஒரு முத்தத்தைக் கொடுத்துத் தன் சந்தோஷத்தைத் தெரிவித்தாள் மாலதி.

சிறிராம் அங்கே இருந்திருந்தால் என்ன செய்திருப்பான்? மாலதியைப்போல் கன்னத்தில் ஒன்று தருவதோடு நிறுத்தியிருப்பானா? அல்லது போராட்டத்துக்காகத் தன் காதலைத் துறந்திருப்பானா?

ஏன் இல்லை....? அன்றொருநாள்.... தனிமையில் சந்தித்தபோது....!!

"கீதா!போராட்டமெண்டால் அழிவுகளை ஒவ்வொருத்தரும் எதிர்பார்க்கத் தான் வேணும்... அதுக்காக மனஞ் சோரக்கூடாது..."

"அழிவுகளைத் தடுக்கேலாதா?" என்று கவலையுடன் கேட்டாள் கீதா.

"தடுக்க முடியாட்டாலும் குறைக்க முயற்சிக்கலாம்.... ஒவ்வொருத்தரும் தற்காப்புக் கலையில் தேர்ச்சி பெற்றிருக்க வேணும்... அதுமட்டுமில்லை.... சிறுசிறு ஆயுதங்களைப் பாவிக்கவும் தெரிஞ்சிருக்க வேணும்..."

அவனது பேச்சின் தாக்கத்தினால், சிறிராம் வெளிநாடு சென்ற பின்பு கீதாகூட போராளியாக இருந்த தோழியொருத்திமூலம் சிறு ஆயுதங்கள்.... வெடிகுண்டுகள் போன்றவற்றை இயக்கும் முறைகளை அறிந்து வைத்திருந்தாள்...

இடப்பெயர்வு சிறிது இளைப்பாறலுக்குப் பின் ஆரம்பமானது.

ஊர் பல சேர்ந்து ஒன்றான பெரும் கூட்டமானது அனுமான் வால்போல நீண்ட வண்ணம் இருந்தது.

மாலதியின் முகம் வாடியிருந்தது.

ஒட்டி உடல் மெலிந்திருக்க
உப்பி வயிறு பெருத்திருக்க
எட்டி அடியெடுத்து நடந்தாள் அவள்
இன்னொருயிர் வாழ எண்ணி!

நடைப்பயணம் தொடங்கி அரைமணிநேரம் சென்றிருக்கும். மாலதியின் உடல் வியர்க்கத் தொடங்கியது.

கீதாவின் காதில் மாலதி ஏதோ கூறியதும், கீதா திடுக்கிட்டாள்.

எது நடக்கக்கூடாதென்று இருவரும் இறைவனை வேண்டிக் கொண்டார்களோ, அதற்கான அறிகுறி தோன்றிவிட்டது. ஆம். மாலதிக்குப் பிரசவ வலி...!

கருவில் இருக்கும் சிசுவுக்கோ
கால நேரம் தெரியவில்லை
உந்தித் தள்ளுதா உள்ளிருந்து
முந்தி வெளிப்பட வெண்ணி!

மாலதியால் அதற்குமேலும் நடக்கமுடியவில்லை. தரையிலே அமர்ந்து விட்டாள்.
அனுபவமுள்ள நடுத்தர வயதுப் பெண்மணியொருவரைக் கீதா **அழைத்து** வந்தாள்.
பல பெண்கள் சுற்றி வளைத்து மறைத்து நின்றனர்.
வேதனை தாங்காத மாலதியின் முனகல் **அனைவர் உள்ளங்களையும் உலுக்கியது.**
நாய்கள் பெருங்குரலெடுத்து ஊளையிட்டன.
திடீரென ஒரு அலறல் எழ.... பக்கத்து மரங்களில் இருந்த பறவைகள் சிறகடித்துப் பறந்தன.... பின்.... நிசப்தம்....!
பிரசவம் பார்த்த பெண் வாட்டத்துடன் வெளியே வந்தாள்.
ஆவலுடன் நோக்கிய கூட்டத்துக்கு, பிறந்த பெண் குழந்தை சிறிது நேரத்தில் இறந்ததும்....மாலதியின் கவலைக்கிடமான நிலையும் சேதியான போது.... சோகம் அங்கே கனதியாய் அமர.... நிசப்தம் மயானஅமைதியானது.
கந்தகக் காற்றைச் சுவாசிக்க விரும்பாத அந்தக் கற்பூரமுல்லை, ஈழத்தில் நடக்கும் கொடுமைகளைக் கண் திறந்து பார்க்க விரும்பாமல் போய்விட்டதுபோலும்.
ஆயுள்வேத வைத்தியர் ஒருவர் அக்கூட்டத்திலிருந்து அழைத்து வரப்பட்டார்.மாலதியின் கைநாடியைப்பார்த்துவிட்டு உடனே ஆஸ்பத்திரிக்குச் கொண்டு செல்லும்படி கூறினார். அவசர அவசரமாக ஒலிபெருக்கி வாகனத்தில் மாலதியை ஏற்றுவதற்கு ஆயத்தமானார்கள்.
மாலதிக்குக் கிட்டவந்து நின்ற பாட்டியொருவரின் பார்வை எல்லோரையும் யோசிக்க வைத்தது. நெற்றியையும் நெஞ்சையும் தொட்டுப் பார்த்துவிட்டு தலையில் அடித்து ஒப்பாரி வைக்கலானார்.
ஒலிபெருக்கி வாகனம் தேவைப்படவில்லை! மாலதி இறந்துவிட்டாள்!!
கீதாவின் முகத்தில் என்றுமில்லாத ஒரு வித்தியாசமான உணர்ச்சி.... உள்ளம் எரிமலையாக.... அதன் குமுறல் கண்களில் தெரிந்தது.
கண்கள் விட்டுவிட்டுக் கண்ணீர் கொட்ட, யாருடனும் அவள் பேசவில்லை. ஊமையானாள்.
பெரியவர்கள்சேர்ந்து சடலங்களை அங்கே புதைத்தார்கள். எல்லாவற்றையும் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த கீதா, அடக்கம் செய்த மண்மேட்டில் ஓர் மலரை வைத்துவிட்டுத் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு கூட்டத்தினரை நோக்கி நடந்தாள்.
கூட்டம் நகரத் தொடங்கியது. கீதாவின் நடையில் முந்திய வேகம் இல்லை. "பெற்றோரைப் பார்க்கப் போகிறேன். நான் தொடர்ந்து வரவில்லை" என்றால் தொண்டர்கள் பாதுகாப்புக் கருதி அனுமதிக்கமாட்டார்கள்.
ஆகவே, எவருக்கும் தெரியாமல் கூட்டத்திலிருந்து விலகி நடக்க முடிவெடுத்தாள். மக்கள் ஓர் வளைவில் திரும்பும்வேளை ஓர் மரத்தின் மறைவில் நின்று, எதிர்த்திசையில் நடக்க ஆரம்பித்தாள்.

பெற்றோரின் நினைவு, அண்ணியின் மறைவு ஆகியவற்றால் ஏற்பட்ட மனக்கொந்தளிப்பு பின்நின்று தள்ள, மிகக் குறுகிய நேரத்திலேயே தன் ஊரின் எல்லையை அணமித்தாள்.

விடியும்வேளை.... கிழக்கு வெளிக்கத் தொடங்கியது....

அங்கும் சிலர் பாடசாலைகளிலும் கோயில்களிலும் கும்பல் கும்பலாக அரைத் தூக்கத்தில் போர்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அவர்களைக் கடக்கும் சமயத்தில்,

"ஆரது... ஆரது.... அந்தப்பக்கம் ஒருத்தரையும் போகவேண்டாமாம்.... குண்டுகள் எல்லாம் வெடிக்காமல் கிடக்காமெல்லே?!" என்றொரு குரல் கேட்டது.

"நான் சும்மா நித்திரை வராமை உலாத்திறன்... அங்கை ஏன் போறன்..."" என்றாள் கீதா.

பேசிய குரல் அமைதியானது.

ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவள்போல் ஓட்டமும் நடையுமாகப் பிரதான வீதியை அடைந்து, எதையோ தேடியவாறு நடந்தாள். தூரத்தில் வெய்யில்பட்டு ஏதோ மினுங்கியது. யாரும் இல்லை. கிட்ட நெருங்கினாள். சந்தேகமில்லை. வெடிக்கத் தவறிய வெடிகுண்டுதான்.

அதை எடுத்துச் சேலைத்துணியால் மறைத்துக் கொண்டாள்.

அதே பாதையில் இடிந்த வீடுகள்.... முறிந்த பனைகள்.... கூரையில்லாத வீடு ஒன்றில் குழந்தையொன்று இருப்பதுபோல் தெரியக் கிட்டச்சென்றாள். அது அழகாய் ஆடையணிந்திருந்த ஒரு பொம்மை.

எந்தக் குழந்தை இந்தப் பொம்மையை நினைத்து முகாமில் இருந்து அழுகிறதோ?!

பொம்மையை எடுத்துக்கொண்டு வழமையாகச் சிறிராமுடன் தனிமையில் கதைக்கும் மண்மேட்டை அடைந்தாள்.

பொம்மையைப் பிரித்து உள்ளே குண்டைத் திணித்து மூடினாள்.

பின் குழந்தையை எதேச்சையாகத் தூக்குவதுபோல எடுத்துக்கொண்டு நடந்தாள்.

காதுக்கெட்டிய தூரத்தில் பெரும்சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அங்கே வீடுகளைத் தரைமட்டமாக்கித் தங்களுக்குப் பாதுகாப்பு வலயம் அமைத்துக் கொண்டிருந்தார்கள்.

மெல்ல அத்திசை நோக்கி நடக்கத் தொடங்கினாள்.

அங்கே ஐந்து கனரக வாகனங்கள் ஒன்றாக நிற்பது தெளிவாகத் தெரிந்தது. அறுபது எழுபது இராணுவத்தினர்வரை தெட்டன்தெட்டனாகவும் கூட்டமாகவும் நின்று கும்மாளமடிப்பதும் தெரிந்தது.

அருகிலிருந்த மரத்தடியில் உட்கார்ந்த கீதா, குழந்தையை மடியில் வைத்துப் பால் கொடுப்பதுபோல் பாவனை செய்து கொண்டிருந்தாள்.

கீதாவைக் கண்ட இராணுவத்தினர் கிண்டல் செய்வதும், கையசைத்து "வா" என்று சைகை காட்டுவதையும் உற்று நோக்கிக் கொண்டிருந்தவள், சட்டென எழுந்தாள்.

பொம்மையின் தலையை சேலையால் சுற்றிக் கொண்டாள். பயந்து பயந்து நடப்பதுபோல் பாசாங்கு செய்துகொண்டு அவர்களை நோக்கிச் சென்றாள்.
தீப்பந்தங்கள்போல அவளிரு கண்களும் சிவக்க, மதுரையை எரித்த கண்ணகியானாள்.
அவளது வருகையைக் கண்ட இராணுவத்தினர், மலரைநாடும் தேனீக்களாக ஒன்றுகூடி அவளைச் சூழ்ந்து கொண்டனர்.
மின்வெட்டும் நேரத்தில் வீசியெறிந்தாள் குண்டுப் பொம்மையை....!
விண்ணும் மண்ணும் அதிர்ந்தன!!
கீதா வீசிய குண்டின் பாதிப்பால் இராணுவ வாகனங்களில் இருந்த குண்டுகளும் சேர்ந்து தமது ஆற்றலைக் காட்டி அதிர....
தரைபுரண்டு கிடந்தன பல பிணங்கள்.
ஏதும் அறியா இலங்கை வானொலி, தவறுதலாக ஒரு குண்டு வெடித்ததினால் நாற்பத்தேழு இராணுவத்தினர் இறந்ததாகவும்.... அதேவேளை ஐந்து கனரக வாகனங்கள் அழிந்துவிட்டதாகவும் கூறியது.

குண்டைப் பொடிசெய்து குழம் பாகும்
அஞ்சாப் பெண் ணிவளைச்
குன்றத்தெழு கோபுரத்தின் மூலத் திருவுருவாய்
கொண்டாட வேண்டு மம்மா!!

முன்பு சிறிராமன் கடிதமொன்றில் "கீதா, கீதா, கீதா!" என அடுத்தடுத்துச் கூறும்போது "தியாகி, தியாகி!" என்று ஒலிப்பதால் அது காரணப்பெயரென எழுதியிருந்தான்.
அதை அவள் உண்மையாக்கிவிட்டாள்.
புராண காலத்தில் விசுவாமித்திர முனிவன் இறைவனுக்கு தன் காயத்தைத் திரியாக்கி எரித்து விளக்கேற்றினான். அதனால் அப்போது அவன் ஜெபித்த மந்திரம் இன்றும் காயத்திரி மந்திரம் என்று போற்றப்படுகிறது.
அதேபோல, கீதாவும் தமிழீழ மண்ணுக்காகத் தன் காயத்தைத் திரியாக எரித்து...
காயத்திரியாக மாறிவிட்டாள்!!



வேலணையூர் பொன்னண்ணாவில்

# வெந்தவனம்

-ஒரு மீள்பார்வை.

கவிதையென்பது என்ன?
அது வேறொன்றுமில்லை. - மனிதவாழ்வியலின் மறுபதிப்பு.
கவிதையில் மாந்த வாழ்வியலின் அனைத்து நிகழ்வுகளும் தடம்பதித்திருக்க வேண்டும்.
அதைத் தவிர்த்த வேறெதுவும் கவிதையாகாது!
வெந்தவனம்-
மனம் வெந்தவர்களின் பாடுபொருளாக அமைந்துள்ளது.
இழந்துப் போன மானிடக்கூறுகளின் மறுபதிப்பாகியுள்ளது.
ஒரு போராட்டத்தின் அடையாளச் சின்னமாகியுள்ளது.
'வெந்தவனம்
இதில் கவிதைமட்டுமல்ல- கருத்தும் உள்ளது.
இதில்சொற்கள்மட்டுமல்ல- சோகமும் உள்ளது
வெந்தவனம்-
வெந்துப்போன உடலங்களின் கொப்புளங்கள், தமிழன் காலந்தோறும் நாடுதோறும் எப்படி அடிபடுகிறான்:

எரியுது...எரியுது...எம்தேசம் — கொடிய
எதிரிகள் போடும் குண்டாலே...
கொதிக்குது கொதிக்குது என் நெஞ்சம் — அடுப்பில்
கொதித்திடும் சோற்று உலை போலே!
(வெந்தவனம் பக்கம் 18)

-என்று கவிஞர் குமுறுகின்றார்.இது தனியொரு மனிதனின் குமுறல், இச்சூழல் தனியொரு மனிதனின் சூழல் என்று எண்ணிவிடாதீர்கள்.
இது உலகத் தமிழினத்தின் குமுறல்- உலகத் தமிழனின் இழிநிலை!
மனத்தாலே- உடலாலே வெந்துக்கொண்டிருக்கும் மக்கள் மத்தியில்,
தன்னினத்தின் இன்னலை பிறருக்கு எடுத்தியம்ப வந்துள்ளது வெந்தவனம்!
ஓர் வலிமைத் தேடலில் மனிதன் மரமாகிவிடக்கூடாது என்பதை வலியுறுத்தப் புறப்பட்ட வேலணையூர் பொன்னண்ணா அவர்கள் நன்றாகவும் நாலுபேருக்குத் தெரியவும் பாடியிருக்கிறார்!

உலகில்வாழும் எவனும் தன்னையும் தனனினத்தையும் உணர்ந்தவனாக வாழவே முற்படுகின்றான். இதன் முடிவே இனமான வெற்றியாக அமைகிறது!

ஆனால் தமிழன் மட்டும் இதிலிருந்து வேறுபட்டவனாக இருக்கிறான். இவர்களில் விதிவிலக்காக வாழும் சிலரில் கவிஞர் வேலணையூர் பொன்னண்ணாவும் ஒருவராக இருக்கின்றார். தன் இனத்தின்மீது படிந்துள்ள தூசிகளைத் தட்டிவிடுவதற்காக வெந்தவனத்தை உருவாக்கியுள்ளார்! வெந்தவனத்தில் எல்லாமும் உண்டு. எல்லாவற்றிற்கும மேலாக ஒரு விடுதலைக்கான உணர்வலைகள் ஊதப்பட்டுள்ளது.
அதுவே வாழ்த்துவதற்குரிய விதியாகும்.
50 கவிதைகளில் ஓர் ஆக்கம்.
கண்ணீர் தெறிப்புக்கள் கணக்கில்லாமல் கிடக்கின்றன.
ஓர் அவசர யுகத்தின் அடையாளச் சின்னமாக மலர்ந்துள்ளது.
தமிழர்கள் மட்டுமல்ல-தமிழ் தெரிந்தோர் யாவரும் படித்துணரவேண்டிய நூல்.
வெந்தவனம்-
அனுபவத்திரட்சியின் மொத்தவடிவம்.

-சீ.அருணாசலம்
(பகாவ்,மலேசியா)


தை-மாசி இதழ்:
7வது ஆண்டு நிறைவு மலர்.

1998ல்

இனிய தமிழ் ஏடு
பூவரசு

பங்குனி-சித்திரை இதழ்:
50வது சிறப்பிதழ்.

51வது இதழிலிருந்து
ஒவ்வொரு இதழும்
பிறநாட்டுச் சிறப்பிதழ்களாக வெளிவரும்

முதல் சிறப்பிதழ் மலேசியாச் சிறப்பிதழ்!

# NEWS

சுவிஸ் வாழ் தமிழ் மக்களுக்கு ஓர் அன்பான அறிவித்தல் !
கொழும்பில் உங்கள் உறவினர்கள் இல்லை என்ற கவலையா ?
கவலையை விட்டுத்தள்ளுங்கள் இதோ !
இலங்கையில் இருந்து வெளிவரும் பிரபல பத்திரிகைகளின்
(வீரகேசரி உட்பட) விளம்பர சேகரிப்பாளராக சுவிசில் திரு ரவி
அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார் என்பதனை மிகவும்
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

(1) உங்கள் குழந்தையின் பிறந்தநாள் வாழ்த்து
(2) திருமண வாழ்த்து
(3) வியாபார சம்பந்தமான விளம்பரங்கள்
(4) நினைவஞ்சலிகள்

மற்றும் அனைத்து விளம்பரங்களையும் இலங்கை பணத்தின்
பெறுமதிக்கே சுவிசில் செய்து தர ஆவலாய் உள்ளோம் என்பதை
உங்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.
மேலதிக அனைத்து தொடர்புகளுக்கும்

A.Raveendran
Burunnackerweg- 29
CH-4528 Zuchwil

☎ & 📠 032/685 37 42

**மறந்து விடாதீர்கள் உங்களது**
**செல்வக் குழந்தையின் புன்சிரிப்பை**
**உலகம் முழுவதிலும் உள்ள தமிழ் மக்களிடம்**
**தெரியப்படுத்துவதையிட்டு**
**நாங்கள் மிகவும் பெருமகிழ்ச்சி**
**அடைகின்றோம்**
**நன்றி**





அடுத்த இதழ்....

# பூவரசு

இனிய தமிழ் ஏடு
ஏழாவது ஆண்டு நிறைவு மலர்!

முன்னணி எழுத்தாளர்களுடன்
அறிமுக எழுத்தாளர்களின் படைப்புக்களும்
இம்மலரை அலங்கரிக்கின்றன.



வண்ணமுகப்பு.
அதிகபக்கங்கள்.
பல்சுவை அம்சங்கள்.

---

1998 தைத்திங்களில்
பூவரசு வாசகர் அரங்கில் மலர்கிறது-
பூவரசு கலை இலக்கியப் பேரவை வழங்கும்

## 'பூவரசம்பூ'

இதுவரைகாலமும் பூவரசு நடாத்திய
கலை நிகழ்வுகளிலிருந்து தொகுக்கப்பட்ட
வீடியோ மலர்.

உலகத்தை இல்லமாக்கி உள்ளங்களை சொந்தமாக்கி
கடந்துபோன காலங்களில், கலைத்துவமுள்ளவர்களைக்
கண்டுபிடித்த பெருமிதத்தோடு மலரும் இந்தப்
'பூவரசம்பூ'

உங்கள் இல்லங்களில் இருக்கவேண்டிய
ஒரு ஒப்பற்ற செல்வம்.